மலர்-5 இதழ்-130 16 - 30 ஜனவரி 2022 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை



பேரறிஞர் யார் அவருக்குரிய தகுதி என்ன?

காகபுஜண்டர் அருளிய நற்பவி மந்திரம்

## வெண்ணை காப்பிட்டால் கேட்ட வரம் தரும் சிவன்

# பிள்ளையார் மகிமை



விநாயகர் தாய் தந்தையரை அன்புடன் வழிபட்டதால் பிள்ளை என்ற பெயருடன் ஆர் என்ற பன்மை விகுதி பெற்றுப் பிள்ளையார் என்று பேர் பெற்றார்.

முருகர், அம்பிக்கை ராமர், கிருஷ்ணர்முதலிய உருவங்கள்சிற்ப முறைப்படி செய்து வழிபட வேண்டியவை. அவை சிற்ப லட்சணத்திற்கு மாறுபட்டிருந்தால் வழிபாடு செய்பவருக்கு நன்மை கிடைக்காது. ஆனால் பிள்ளையார் உருவம் அப்படி அல்ல. மஞ்சளை அரைத்து ஒரு சிறு குழந்தை கூட பிடித்து வைத்தால் போதும் பிள்ளையார் தயார். பிள்ளையார் அவ்வடிவில் எழுந் தருளி அருள்புரிவார்.

சந்தனம், களி மண், மஞ்சள், சாணம் இப்படி எளிதாகக் கிடைக்க கூடிய பொருளில் விநாய கரை செய்து வழிபடுவார்கள்.

# கிருஷ்ண உபதேசம்

அர்ஜுனா! உனக்கு மோட்சத்தை கொடுப்பவன் நான் தான். நீ மோட்சம் செல்ல வேண்டும் என்றால் எனக்கு பிடித்ததை செய்ய வேண்டும். அதாவது புண்ணியம் செய்ய வேண்டும். தர்மம் செய்தால் புண்ணியம் கிடைக்கும். ஆனால் நீ செய்யும் பொழுது உனக்காக செய்யக்கூடாது. அதாவது நீ தர்மம் செய், ஆனால் நான் தான் செய்தேன் என்று மனதில் நினைக்காமல் செய்.



ஒருவர் உன்னால் மனமுடைந்து அதை இறைவனிடம் முறையிட்டுஅழும் நிலைக்கு ஒருபோதும் கொண்டு வந்து விடாதே. உடைக்கப்பட்ட மனங்களின் வேண்டுதல்கள் இறைவனிடத்தில் அத்தனை பலம் மிகுந்தவை. உன்னை விரட்டி விரட்டி தண்டிக்கக் கூடியவை.



# ஐந்து முக அனுமன் வரலாறு

எப்போதும் ராம நாமத்தைமட்டுமே சொல்லிக் கொண்டிருப்பவர் ஆஞ்சநேயர். ராமபெருமானுக்கு சேவை செய்வதையே கடமையாக கொண்டவர்.

சீதையை மீட்பதில் முக்கிய பங்கு வகித்த இவர், மேலும் ஒரு அவதாரத்தை எடுத்துள்ளார், அதுதான் பஞ்சமுக அனுமன். சிங்கம், குரங்கு, கருடன், குதிரை, வராகம் ஆகிய ஐந்து முகத்துடன் காட்சி தருபவர்தான் பஞ்ச முக அனுமன்.

இராவண அவதாரம் முடிந்த பின் அசுரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சதகண்டன் என்பவனின் தலைமையில் தேவலோகத்தில் உள்ள தேவர்களுக்கு தீமை விளைவித்து வந்தனர்.

அந்த சமயத்தில்தான் அனுமன் பஞ்ச முகத்துடன் அவதரித்து அவர்களை வதம் செய்து தேவர்களை காப்பாற்றினார்.

இவரை வழிபட்டால் நரசிம்மர், கருடாழ்வார், வராகமூர்த்தி, ஹயக்ரீவர், அனுமன் ஆகிய ஐந்து தெய்வங்களையும் வழிபட்ட பலன் ஒரே நேரத்தில் கிடைக்கும்.

# பெருமாளுக்கு உதவி செய்த மருமகன் யானை வாகனம் கொண்ட முருகன்




கயிலாய மலைக்கு ஈடாக கருதப்படும் மலை திருத்தணி மலை. என்று அருணகிரிநாதர் திருப்புகழில் பாடி இருக்கிறார். முருகப்பெருமானுக்கு உரிய திருவுருவங்கள் 16. அதில் ஞானத்தை அருளும் ஞானசக்திதரனாக திருத்தணியில் வீற்றிருக்கிறார். சாந்தமான முகத்துடன், இடதுகையைத் தொடையில் வைத்து, வலது கையில் வேல் தாங்கி காட்சி தருகிறார்.

தாரகாசுரனிடம் போர்புரிந்து சக்ராயுதத்தை இழந்த திருமால், மீண்டும் தன் சக்ராயுதத்தை பெற்றுத் தந்த பெருமை கொண்டவர் இம்முருகனே. முருகப்பெருமானுக்குரிய வாகனமாக எங்கும் மயில் இருக்க, இங்கு யானை வாகனமாக அமைந்துள்ளது. லட்சுமியின் அம்சமான இந்த யானையுடன் கூடிய முருகனை வழிபடுவோருக்கு தேவர்களுக்கு நிகரான செல்வவளம் உண்டாகும் என்பது ஐதீகம். இதன் காரணமாகத்தான் புதுவருடப் பிறப்பின் போது இந்தத் தலத்தில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

இங்குள்ள இந்திரச்சுனை நீரால் முருகப்பெருமானுக்கு தினமும் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதில் பக்தர்கள் நீராட முடியாது. மார்கழி திருவாதிரை நாளில் முருகனுக்கு வெந்நீர் அபிஷேகம் செய்யப்படுவது சிறப்பு. குளிர்காலம் என்பதால் முருகன் மீது கொண்ட அன்பு கருதி இவ்வாறு செய்கின்றனர்.

# சனிதோஷத்தை கட்டுப்படுத்தும் முருகஸ்தலம்




தேனி மாவட்டத்தில் உள்ள சுருளிமலையில் ‘கைலாசப்புடவு’ என்னும் குகை உள்ளது. இக்குகையில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் சனிதோஷத்தை நிவர்த்தி செய்யும் வல்லமை பெற்றவராக விளங்குகிறார்.

இங்கு, சுருளிதீர்த்தம் என்னும் அருவியும் விழுகிறது. காட்டு மூலிகைகளில் பட்டு வரும் இந்த நீர் நோய்தீர்க்கும் மருந்தாக விளங்குகிறது. சனீஸ்வரரின் உக்ரபார்வையால் அவதியுற்ற தேவர்கள் சுருளிமலை முருகனிடம் தஞ்சம் புகுந் தனர்.

முருகப்பெருமான், தன் அருள்பார்வையால் சனீ ஸ்வரரின் பார்வை பலத்தைக் குறைத்து நற்பலன் அளித்தார். சனி தோஷத்தால் துன்பப்படுபவர்கள் சுருளிநாதரான முருகனை வழிபட்டால், துன்பம் நீங்கப்பெறுவர் என்பது ஐதீகம்.

# பேரறிஞர் யார் அவருக்குரிய தகுதி என்ன?

## கருடப்புராணம் கூறும் விளக்கம்

தற்போது பட்டம் பதவி என்பது மிகச் சாதாரணமாக கிடைத்துவிடுகிறது, பல்வேறு அமைப்புகள் பல்வேறு பதவி பட்டங்களை பணத்திற்கு விற்கும் இக்காலக்கட்டத்தில் உண்மையான பட்டங்களுக்கு தகுதியுள்ளவர்கள் யார் என்பதை கருடப்புராணம் விரிவாக கூறியுள்ளது.

அதன்படி பேரறிஞர் என்ற பட்டத்திற்கு தகுதி வாய்ந்தவர் யார் என்பதை கருடப் புராணம் கூறி யுள்ளது அதைப் பார்ப்போம்.

எத்தனை நாட்கள் வாழ்ந்தாலும் என்றாவது இறப்பது நிச்சயம் என்பதை யாரும் நினைப்ப தில்லை. உயிர்களைக் கவர்ந்து செல்லும் எமன், பணக்காரன் ஏழை, பதவியில் உயர்ந்தவன், சாதராணமான வன்என்ற பாகுபாடு பார்க்கமாட்டான், அனைவரும் காலன் கணக்கு முடிந்ததும் அழைத்து அவசியம் அழைத்துச் செல்வான். எக்காரணம் கொண்டும் அவன் யாரையும் விட மாட்டான்.

இந்த உண்மையை உணர்ந்த மனிதன் காலனுக்கு பயந்தாவது நல்ல தருமங்கள் இயற்றி அறநெறிப்படி வாழ்வான். அவன் தர்மங்களை ஒழுங்காகச் செய்து வருவானாகில், அக்கருமங்களே அவனைக் காப்பாற்றும். தனக்குரிய கர்மங்களை ஒருவன் முறைப்படிச் செய்தால் அவனேஎல்லாவிடத்திலும் மேன்மை யடைவான்.

தற்போது மருத்துவர்கள், காவலர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், பொறியாளர்கள், உழவர்கள் என்று பல பிரிவு தொழில் செய்பவர்கள் இருந்தாலும், இவர்கள் செய்யும் தொழில்கள் அனைத்தையும் நான்கு வர்ணங்களில் அக்காலத்திலேயே வகுத்து வைத்துள்ளது கருடப் புராணம்.


www.aanmeegamalar.com

பிரம்ம, ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என இந்த நான்கு வருணத்தில்தான் அனைத்து பிரிவினரும் அடங்கிவிடுகிறார்கள்.

பிராமணருக்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்று ஆறு கர்மங்கள் உள்ளன.

ஷத்திரியருக்கு ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயித்றல், பொறுத்தல் என்று ஆறுவகைக் கருமங்கள் உண்டு.

வைசியருக்கு ஓதல், கேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக்களைக் காத்தல், ஏரூழல் என ஆறு கர்மங்கள் உண்டு.

சூத்திரருக்கு ஓதல், பணியாற்றல், பொருளீட்டல், உழுதல், பசுகாதல், வேட்டல் முதலிய ஆறு கர்மங்கள் உண்டு.

அவரவருக்கு ஒதுக்கப்பட்ட ஒழுக்கபடி நடப்பதே பெரிய தவமாகும்.

அதில் வழுவாது ஒழுங்காக வாழ்பவர் எவரோ, அவரே போகத்தையும் யோகத்தையும் ஒருங்கே அடைந்து நெடுநாள் வாழ்ந்து, இறுதியில் தமக்குரிய உலகை அடைவார்கள்.

இக்கருமங்களை செய்யும்போது ஆசை பற்று போன்றவற்றை துறந்து வாழ்பவர்கள் அனைவரும் பேரறிஞர்கள் ஆவார்கள்.

பேரறிஞர் என்பதற்கு எந்தவித வருண பேதமும் கிடையாது மேற்கண்ட கருமங்களை கடைபிடிக்கும் அனைவரும் பேரறிஞர் என்று திருமால் கருடப்புராணத்தில் கூறியுள்ளார்.

## இந்து மதத்தின் பெருமையை

# விவேகானந்தர் உலகிற்கு உணர்த்திய இடம்




அமெரிக்காவின் சிகாகோ மாநிலத்தின் பிரதானப் பகுதியில் அமைந்துள்ளது 'சிகாகோ கலை நிறுவனம் (Chicago Art Institute)'. மிகப் பிரமாண்டமான பரப்பளவிலுள்ள இவ்வளாகத்தில் தான் 1893ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதி உலகச் சமயங்களின் முதல் மாநாடு நடந்தேறியது.

பல்வேறு தேசத்தைச் சேர்ந்தவர்கள் தத்தமது ஆன்மீகச் சமயம் குறித்து விரிவுரையாற்றினர்.

பாரத தேசத்து வேதாந்தச் சிங்கமான சுவாமி விவேகானந்தரின் முறையும் வருகின்றது. பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் குருவருளைத் துணையெனக்கொண்டெழும் சுவாமி, 'என் அன்புற்குரிய அமெரிக்க சகோதர சகோதரிகளே' என்று தம்முடைய சிற்றுரையைத் துவங்கிய மறுகணமே, அச்சொற்கள் உருவாக்கிய ஆன்மீக அதிர்வலைகளாலும், சுவாமியின் இப்புதிய அணுகுமுறையாலும், அரங்கத்தினர் அனைவரும் பெரிதும் உணர்வு வயப்பட்டு, தொடர்ந்து பல நிமிடங்களுக்குக் கரவொலியால் ஆர்ப்பரித்து வரவேற்று மகிழ்ந்தது.

எவ்வளவோ மதப் பெரியோர்கள் உரையாற்றி இருப்பினும் இவ்வரங்க வாயிலில், பாரத தேசத்து இளம் இந்துத் துறவியான சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படம் மட்டுமே பொறிக்கப் பெற்றுள்ளது.

சனாதனமான நம் இந்து தர்மம் குறித்த சுவாமியின் வேதாந்த விரிவுரைகள் ஒவ்வொன்றும் அமெரிக்காவில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வந்தது. அங்குள்ள ஒவ்வொரு நாளிதழும் சுவாமியின் ஆச்சரியமான இவ்விரிவுரைகளைப் பலவாறு புகழ்ந்துக் கொண்டாடித் தீர்த்தது உலகறிந்த செய்தி.






# 84,00,000 உயிரினங்களில்

## மனித உயிரினமே உயர்ந்தது




உலகில் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்கள் உள்ளன. அவை அண்டகம், உற்பிசம், சராவுசம், சுவேதசம் என்று நான்கு வகையில் உள்ளன.

அண்டகம் என்ற வகையில் முட்டையிலிருந்து இருபத்தோரு லட்சம் பறவைகள் தோன்றின.

உற்பிச வகையில் இருபத்தோரு லட்சம் மரஞ், செடி, கொடி, தாவர வகைகள் தோன்றின.

கருப்பப் பையிலிருந்து தோன்றுவதான சிரா யுசம் வகையில் இருபத்தோரு லட்சம் மனிதர்கள் உட்பட தோன்றினர்.

வேர்வையிலிருந்து தோன்றுவதான சுவேதசம் வகையில் இருபத்தோரு லட்சம் கொசு முதலிய வைகளும் தோன்றியுள்ளன.

பிறவிகள் அனைத்திலும் மானுடப் பிறவி அரிதினும் அரிது. மனிதப் பிறவியே புண்ணியப் பிறவியாகும். எல்லா விதத்திலும் மானிடப் பிறவியே சிறப்புடையது.

என்று கருடப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

மனிதப் பிறவி எவ்வாறு உத்தம பிறவியாகும்

என்பதையும் கருடப் புராணத்தில் தெளிவாக கூறியுள்ளார் மகாவிஷ்ணு.

புண்ணியத்தால் அடைந்த மானுடப் பிறவியால் பாக்கியம் அடையாதவர்கள், தமக்குத் தானே வஞ்சனை செய்து கொள்பவர்களாவார்கள்.

மண், பொருள், ஆசைகள் எனப் படும் இம்மூன்று ஆசைகளால், மயக்க முற்று செய்யத் தகாதவற்றைச் செய்து தன் மனசாட்சிக்கும், மனிதாபிமான உணர்வுக்கும், மாறுபாடான தீயச் செயல்களைச் செய்து, தர்மங்களை அறியாமல் உழல்பவன் எவனோ, அவன் மிருகங்களுக்கு ஒப்பாவான்.



புனிதவேல்

இதனால் அறிவுணர்வும், அன்புணர்வும், அறநெறி வாழவும் வளராது. அளவில்லாமல் ஆசைகள் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

ஆசையே அழிவுக்குக் காரணம் என்று போதிக் கும் மகான்களோ, யாவராலும் போற்றப்பட்டு, நம் இறுதி நாளான அந்திம காலத்தில் சுவர்க்க லோகத்தை அடைவார்கள்.

ஆசைக்கு அடிமையானவர்கள் வயோதிகப் பருவம் வந்ததும், தன் புத்திரர், பௌத்திரர்கள் துணித்து கிழப் பிணமே! வாய் திறவாமலே வெறுமனே விழுந்து கிட! என்று இழித்தும், பழித்தும், அதட்டியும் பேசும் ஏச்சு மொழியைக் கேட்டு, மனம்பொறுமிக் கிடப்பான்.

ஆகையால் கல்வியும் வித்தையும் கற்றுணர்ந்த வனேயானாலும் ஞானம் (மெய்யறிவு) இல்லா விட்டால் பொண்ணுக்கு அடிமையாகி கிடப்பான்.

இந்திரிய உணர்வினாலேயே ஒவ்வோர் ஜீவராசிகள் நாசம் அடையும் போது பஞ்ச இந்திரிய இச்சைகளையுடைய மனிதன் அடையக்கூடிய கேடுகள் கொஞ்ச மாகயிராது என்பதில் சந்தேகமில்லை.

இல்லற வாழ்வின் சுகதுக்கங் களில் எது அதிகமாயினும் பெண்டுபிள்ளைகள் அதிகமாகிப் பந்தபாசத்தால் கட்டுண்ட மனிதன் நிம்மதியடைய மாட்டான்.

உலகில் மனிதன் பிறந்து பிறந்தே இறக்கிறான். ஆசைகளால் நோயுற்று மாண்டு விடுகின்றான். ஒருவரும் தனக்கு துணையில்லாமல் ஒருவனாகவே யாருக்கும் சொல்லாமல் மடிந்து போகிறான்.

பொய்யான பத்திரங்கள் எழுதி பொய் சொல்லி, ஏமாற்றி, வழிப்பறி, கொலை புரிந்து, தீயச் செயல்களைச் செய்து, தான் சேர்த்த பொருள்களை, உரியவருக்கு அளித்து, பழி பாவங்களோடு போகிறான்.

அவன் மனைவி மக்கள் பாவங்களில் பங்கு ஏற்றுக் கொள்வாரில்லை.

முக்திக்குச் சாதனமான, தவம், தருமம், தானம் செய்து, பக்தி மார்க்கம் எனப்படும் தேவ சேவைகளை செய்வதே உத்தமமாகும். இவ்வாறு மகாவிஷ்ணு கருடப்புராணத்தில் கூறியுள்ளார்.

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572


aanmeegamalar.com வழங்கும்

## தினம் ஒரு திருக்குறள்







ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்




# முருகனுக்குகந்த காவடியும் சர்ப்பக் காவடியின் மகிமையும்

முருகனுக்கு முக்கிய விரதங்களில் காவடி மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த காவடி எடுப்பதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் இருப்பதுடன், இந்த காவடிகளில் பல்வேறு வகைகள் உள்ளன.

ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு காவடியாக சுமந்து வரும்போது ஒவ்வொரு பலன் கிடைக்கும்.

முருகக் கடவுள் மீது முழு நம்பிக்கை வைத்து, முறையாக விரதமிருந்து கீழ்கண்ட காவடிகளை எடுத்தால் வேலவன் அருளால் வேண்டியதைப் பெற்று இன்புறலாம்.

இதில் திருச்செந்தூர் கடலில் சர்ப்பக் காவடி எடுப்பவர்கள் சர்பங்களை விடுவிக்கும் நிகழ்வு மிகவும் சிறப்பானதாக இருக்கும். அந்த காவடியின் சிறப்பை பார்ப்போம்.

மேலும் எந்த காவடிக்கு என்ன பலன் என்பதையும் பார்ப்போம்.

| | |
|---|---|
| 1. தங்கக் காவடி | நீடித்த புகழ் கிடைக்கும். |
| 2. வெள்ளிக் காவடி | நல்ல உடல் ஆரோக்கியம் உண்டாகும். |
| 3. பால் காவடி | செல்வச் செழிப்பு ஏற்படும். |






| | |
|---|---|
| 4. சந்தனக் காவடி | வியாதிகள் நீங்கும். |
| 5. பன்னீர்க் காவடி | மனநலக் குறைபாடுகள் விலகும். |
| 6.சர்க்கரைக் காவடி | சந்தான பாக்கியம் கிடைக்கும். |
| 7. அன்னக் காவடி | வறுமை நீங்கும். |
| 8. இளநீர்க் காவடி | சரும நோய்கள் விலகும். |
| 9. அலங்காரக் காவடி | திருமணத்தடை நீங்கும். |
| 10. புஷ்ப (மலர்) காவடி | நினைத்தது நடக்கும். |
| 11. கற்பூரக் காவடி | வயிறு சம்பந்தமான பிரச்னைகள் நீங்கும். |
| 12. சர்ப்பக் காவடி | விரும்பிய குழந்தை வரம் கிடைக்கும். |
| 13. மஞ்சள் காவடி | செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். |
| 14. சேவல் காவடி | எதிரிகள் தொல்லை ஒழியும். |
| 15. அக்னிக் காவடி | திருஷ்டி தோஷம் மற்றும் பில்லி, சூனியம், செய்வினை அகலும். |
| 16. தேர்க் காவடி | உயிர் பிழைக்க வைத்ததற்கு முருகனுக்கு நன்றி தெரிவிக்க எடுக்கும் காவடி. |
| 17. மச்சக் காவடி | நீதிமன்ற விவகாரங்களில் இருந்து விடுபடலாம். நேர்மையான தீர்ப்பு கிடைக்கும். |
| 18. மயில் காவடி | இல்லத்தில் இன்பம் நிறையும். குடும்பப் பிரச்னைகள் நீங்கும். |
| 19. பழக் காவடி | செய்யும் தொழிலில் லாபம் கிடைக்கும். |
| 20. வேல் காவடி | எதிரிகள் நம்மைப் பார்த்து அஞ்சிடுவர். |

## சர்ப்பக்காவடி

மேற்கண்ட காவடியில் 12வதாக கூறப்படும் காவடித்தான் சர்ப்பக் காவடி, நல்ல பாம்பினைக் காவடியில் கொண்டு வந்து காணிக்கை செலுத்துவது சர்ப்பக் காவடியாகும். சர்ப்பக்காவடி எடுப்பவர்கள் 41 நாட்கள் கடும் விரதம் இருப்பார்கள்.

விரதம் இருப்பவர்கள் கனவில் ஒரு குறிப்பிட்ட பாம்பை, காட்டில் எந்த இடத்தில் இருக்கிறது என்று கனவு வருமாம். அவர்களும் அந்தக் காட்டில் போய் ஒரு குறிப்பிட்ட அந்த ஜாதி பாம்பை பிடித்து அதை ஒரு பெட்டியில் வைத்து உப்பிட்டு கொண்டு வந்து, அதைக் காவடியாக சுமந்து வந்து திருச்செந்தூர் கடற்கரையில் விடுவார்கள்.

அது வேறு எங்கும் யாருக்கும் தொந்தரவு செய்யாமல் நேரே கடலின் உட்பகுதிக்கு சென்று விடும்.இந்த சர்ப்பக் காவடி முன் னாட்களில் ஒவ்வொரு ஆண்டும் நிறையவே வரும். இப்போது எப்போதாவது அபூர்வ மாகத்தான் வருகிறது. இப் படி சர்ப்பக் காவடி எடுப்பது அவரவர்களின் நம் பிக்கை.



கீதா–ராஜன்

மேற்காணும் படங்கள் 2022ம் ஆண்டு நடைபெற்ற சர்ப்பக் காவடி படங்களின் தொகுப்பாகும்.

முதல் படம் சர்ப்பக்காவடி எடுத்து வந்த கண்ணாடிப்பேழை திருச்செந்தூர் கடலில் வைக்கப்படுகிறது.

அடுத்ததாக கடல் அலைகளால் மண் அரித்து அந்த இடைவெளியில் கண்ணாடிப்பேழையில் இருந்து பாம்பு கடலை நோக்கி மெல்ல நகர்கிறது.

யாருக்கும் தொந்தரவு செய்யாமல், கடல் அலைக்குள் பாம்பு செல்கிறது. பக்தர்கள் கைகூப்பி வணங்குகின்றனர்.

கீதா ராஜன், சென்னை.
போன்:9444228203

# 130 இதழ்களை கடந்துள்ளோம்

## ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக மூன்றுவித சேவைகளை செய்து வருகிறோம்

1.ஆன்மிகமலர்.காம்

2.ஆன்மிகமலர் Mobile app

3. ஆன்மிகமலர் இ-மேகசின்

## எங்களது அடுத்த சேவையாக

**ஆன்மிகமலர் பப்ளிகேஷன் வாயிலாக**

திருக்குறள், சிவபுராணம், கந்தசஷ்டி கவசம் ஆன்மிக எழுத்தாளர்களின் ஆன்மிக தொகுப்பு, ஆன்மிக துணுக்குகள், மகான்களின் சரித்திரம், அறிவுரைகள், பழமொழிகளின் தொகுப்பு,

போன்றவற்றை இ-பப்ளிகேஷன் முறையில் வண்ணமயமான இ-புத்தகங்களாக தயாரிக்கவிருக்கிறோம்.

இந்த புத்தகத்திற்கு sponsor செய்ய விரும்புபவர்களை சிறப்பிக்க, அவர்களின் குடும்ப விசேஷங்கள், திருமணம், பிறந்த நாள், கிரகபிரவேசம் போன்ற சுப நிகழ்வின் நினைவாக அல்லது அவர்களது தொழில் சம்பந்தப்பட்ட விளம்பரங்களை வெளியிடுவதற்காக இந்த புத்தகத்தில் ஒரு பக்கம் ஒதுக்கித்தரப்படும். இதன்மூலம் எங்கள் சேவையில் நீங்களும் பங்கேற்று இறை சிந்தனையை பரப்பலாம்.

sponsor செய்ய விரும்புபவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்:

சி.வி.நடராஜன் 9444228203









www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

## கேரளத்தைப் போன்று தமிழகத்தில் காட்சிதரும்

# சூலூர் பகவதி அம்மன்

கேரளத்தில் சக்குளத்துகாவு திருக்கோயிலில், எட்டுத்திருக்கரங்கள். முருகனுக்குரிய தண்டமும், சிவனுக்குரிய திரிசூலமும் அம்மையின் தோள்களுக்கு மேலே சார்த்தப்பட்டுள்ளன.

சிவச்சின்னங்கள் மட்டுமா, ஒரு கையில் திருமாலின்சக்கரம் இன்னொரு கையில் சங்கு, நெற்றியில் திருநீறும் நாம ரூபமாய்க் திலகமும் விளங்குகின்றன. அம்மைக்கு முன்புறமாகச் சிவலிங்கம் சைவத்திற்கும் வைணவத்திற்கும் அரன்அரிபுத்திரனாய் அய்யப்பன் விளங்குவது போல் அம்மை தரிசனம் தருகிறாா்.

பகவதி சைவமாக வைணவமா என்பதில் கருத்துச் செலுத்துவதை விட, அவள் பெண்களின் வழிபாட்டு கடவுளாய் விளங்குகிறார் என்பதே உண்மை.

அய்யப்பன் கோயிலை நாடி ஆண்கள் இருமுடி கட்டிப் புறப்படுவதுபோல் சக்குளத்துப் பகவதி கோயிலுக்கும் இருமுடி கட்டி விரதமிருந்து



www.aanmeegamalar.com





பெண்கள் வருகிறார்கள். வழிபடுகிறார்கள்.

கேரளத்தின் சக்குளத்து அம்மனின் அதே தோற்றத்தை தமிழகத்தில் சூலூர் பகவதி கோயிலிலும் கண்டு வணங்கலாம்.

கோவை குமரன் கோட்டத்திற்கு மேற்புறம் சூலூர் பகவதியம்மன் கோயில் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் உருவாகியுள்ளது. திருக்கோயிலின் அளவு 27,000 சதுர அடி கேரளப்பாணியில் முகமண்டபம் எடுப்பாக அமைந்துள்ளது. கோயிலின் கருவறையில் 12 இராசிகளுக்கும் 27 நட்சத்திரங்களுக்குமான சிற்ப வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

நான்கு வாயில்களோடு கூடிய தெற்குச் சுவற்றில் மடப்பள்ளி உள்ளது. கன்னிமூலையில்விநாயகர் சந்நிதி, ஈசானி மூலையில் சிவனார் சந்நிதி, தென்மேற்கு மூலையில் அய்யப்பன் சந்நிதி வெளிப்பிரகாரத்தில் நாகராஜர் நாகராணி கோயில் உள்ளன. அம்மனின் திருச்செவிகளில் கேட்கப்படும் எல்லா வேண்டுதல்களையும் கனிவுடன் கேட்கும் சக்குளத்துப் பகவதி அன்னை அதே தோற்றத்தில் சூலூர் கண்ணம்பாயைத்தில் வீற்றிருந்து அருள் புரிகிறார்.

இக்கோவிலில் தினமும் காலை கணபதி ஹோமமும், அம்மனுக்கு அபிஷேகம், மதியம் 11.30 மணிக்கு உச்சி கால பூஜை நடைபெறும். மாலை 6.30 மணிக்கு விஹார்த்தி பூஜையும் இரவு 8 மணிக்கு அபிஷேக பூஜையும், இரவு 8 மணிக்கு அபிஷேக பூஜையும் நடைபெறும்.


விஜயா கண்ணன்

பிரதோஷ தினமன்று சிவனுக்கும், நந்தி தேவருக்கும் சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடைபெறும்.

ஆயில்யம் நட்சத்திர தினத்தில் நாகராஜர், நாகராணிக்கு பால்அபிஷேகம், அபிஷேக பூஜைகள்நடைபெறும். ஸ்ரீ ஐய்யப்பனுக்கு கார்த்திகை மாதம் ஆரம் பித்து மண்டல பூஜை நடைபெறும்.

தை மாதம் ஹஸ்தம் நட்சத்திர தினமன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடி 'பொங்கல்" வைத்து கொண்டாடுவார்கள். இக்கோயில் நிர்வாகம் சிறப்பான உத்ஸவம் ஆக இதனை முக்கிய விழாவாக நடத்தி பக்தர்களை மெய்சிலிர்க்க வைக்கிறார்கள்.

ஆவணி மாத்தில் கொடியேற்று உத்ஸவம் பத்து நாட்கள் கோலாகலமாக நடைபெறும். தினமும் இரண்டு நேரமும் ஹோமம், ஸ்ரீ பலி நடைபெறும்.

தினமும் கொடியேற்றம், அபிஷேகம் பள்ளி வேட்டா நீராட்டு கொடி இறக்குதல் ஆகிய பூஜைகள் நடைபெறும்.

பக்தர்களின் அனைத்து வேண்டுதல்களையும் நிறைவேற்றி அகமகிழ வைக்கும் அற்புத சக்தியாக சூலூர் பகவதி அம்மன் அருள்பாலித்து வருகிறாள்.

குறிப்பாக ஐய்யப்ப பக்தர்கள் கடந்த பல வருடங்களாக கூட்டம் கூட்டமாக இந்த கோவிலுக்கு வந்து வழிபட்டு செல்கிறார்கள்.

இக்கோவில் 2010–ஆம் ஆண்டு முப்பதுக்கும் மேற்பட்ட திருமடங்களின் அருளாளர்களும் இலட்சக்கணக்கான பொதுமக்களும் பங்கேற்ற திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

தம் கனவில் வந்து, கருத்துள் பதிவான சூலூர் பகவதி அம்மன் திருக்கோயில், ஆர்.வி.எஸ் வளாகத்துக்குள் அழகுற அமைய வேண்டும் எனத் திண்ணமாய் எண்ணிய ஆர்.வி.எஸ் நிறுவனர் டாக்டர் கே.வி. குப்புசாமி அவர்களின் மிகப்பெரும் முயற்சியால், சிற்பி செல்வநாதன் குழுவினர் 300க்கும் மேற்பட்டோர் இக்கோவிலை, கேரளத்து சக்குளத்துகாவு அம்மன் கோவிலைப் போன்றே அமைத்துள்ளது மெய் சிலிர்க்க வைக்கிறது.

– விஜயா கண்ணன்,
புது விளாங்குடி,
மதுரை–625 018.
Ph:8825729455

# செய்யும் செயல் அனைத்தும் வெற்றியடைய வேண்டுமா?

# இந்நேரத்தை கடைபிடியுங்கள்



ஜாதக கட்டம் போடும்போது 9 கோள்கள், 12 ராசிகள், 27நட்சத்திரங்கள் உபயோகப்படுத்துகிறோம். ஆனால் நட்சத்திரங்கள் மொத்தம் 28. இந்த 28–ல் முதல் நட்சத்திரமாக இருந்து நல்லது மட்டுமே தருகிற அபிஜித் நட்சத்திரம் அசுரர்கள், கெட்டவர்கள் பார்வையில் படாமல் இருக்க கிருஷ்ண பகவான் தன் கிரீடத்திலுள்ள மயிலிறகால் மறைத்து விட்டார்; ஆகவே யார் கண்ணுக்கும் தென் படாமல் சூட்சமமாக அதன் பாதையில் சுற்றி வருகிறது.

அப்படி கிருஷ்ண பகவானின் மயிலிறகால் மறைத்தது முதல் அபிஜித் நட்சத்திரத்தின் பலம் ஒருவொரு நாளும் கூடுதலாகி வருகிறது. 12 ராசி கட்டத்துக்குள் எந்த ராசியில் இருந்தாலும் இதர ராசிக்காரர்களுக்கு சிரமம் தராது. இன்றும் ஜோதிடர்கள் தாரா பலம் போன்ற சில விஷயங்களை முடிவு செய்ய இந்த நட்சத்திரம் பயன்படுகிறது.

தினமும் அபிஜித் லக்கனம் மதியம் 11.30 முதல் 12.30 வரை உள்ளது.

லக்கனத்தில் மத்திம பாகத்தில் முழு பலத்துடன் இருக்கும் என்பதால் அபிஜித் லக்கனம் மதியம் 11.45 முதல் 12.15 வரை மட்டுமே கணக்கிடப்படுகிறது.

சூரிய உதயம் காலை 6 மணியாக கொண்டு அபிஜித் லக்கனம், கோதூளி லக்கனம் பொதுவாக கூறிவுள்ளோம். நாம் ஒரு செயல் செய்ய எடுக்கும் நாளில் சூரிய உதயத்தை ஏற்ப இந்த நேரம் மாறுபடும். (உதாரணத்துக்கு சூரிய உதயம் 6.04 என்றால், அன்றைய தின அபிஜித்



www.aanmeegamalar.com




லக்கனம் 11.49 முதல் 12.19 வரை வரும்.) இந்த நேரத்தில் தொடங்கப்படும் செயல்கள் வெற்றி அடையும்.

தினமும் காலை 5.45 முதல் 6.15 வரை, மாலை 5.45 முதல் 6.15 வரை ஆக இரண்டு முறை வரும் ப்ரம்ம முகூர்த்தமான கோதூளி லக்கனத்தைப்போல அபிஜித் லக்கனத்திற்கும் நாள், நட்சத்திரம், திதி பார்க்க வேண்டியதில்லை.

திங்கட்கிழமை அபிஜித் முகூர்த்த காலத்தில் நல்ல வேலை கிடைக்கவும், மேலதிகாரிகளின் தொந்தரவு தீரவும் இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொள்ளலாம்.

செவ்வாய்கிழமை அபிஜித் முகூர்த்த காலத்தில் வீடு யோகம் அமையவும் கடன் தீரவும் இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொள்ளலாம்.

புதன்கிழமை அபிஜித் முகூர்த்த காலத்தில் குழந்தை பாக்கியம் பெறவும், இழந்ததை மீட்கவும் இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொள்ளலாம்.

வியாழக்கிழமை அபிஜித் முகூர்த்த காலத்தில் இஷ்ட தெய்வத்தை வேண்டினால் வெளிநாடு செல்லும் யோகமும் கல்வியில் மேன்மையும் கிடைக்கும்.

வெள்ளிக்கிழமை அபிஜித் முகூர்த்த காலத்தில் திருமணம் நடைபெறவும் விரும்பிய வரை திருமணம் செய்யவும் இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொள்ளலாம்.

சனிக்கிழமை அபிஜித் முகூர்த்த காலத்தில் இஷ்ட தெய்வத்தை வேண்டினால் வம்பு வழக்குகளில் இருந்து வெற்றி கிடைக்கும்.

ஞாயிறு அபிஜித் முகூர்த்த காலத்தில் இஷ்ட தெய்வத்தை வேண்டினால் அவசரகால வைத்தியம் வெற்றிகரமாக நடந்து நாம் பூர்ணமாகவும் உடனடியாகவும் நலம்பெற்று வெற்றி கிடைக்கும்.





மாதம் இரண்டு முறை
வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# கும்பாபிஷேகத்திற்கு காசி நீரைத் தரும் குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவில்






சிவவழிபாடுகளில் முக்கியமாக பிரதோஷ வழிபாடு உள்ளது. பிரதோஷம் நேரமான மாலை வேளையில் நந்திபகவானுக்கும் சிவனுக்கும் ஒரேநேரத்தில் அபிஷேக வழிபாடு நடைபெறும்.

இந்த நேரத்தில் பக்த்தர்கள் நந்தி பகவானுக்கு வைக்கப்படும் வேண்டுதல்களை சிவபெருமான் தீர்த்து வைக்கிறார் என பக்த்தர்களால் நம்பபட்டு வருகிறது.

ஞாயிறு முதல் சனி வரை ஒவ்வொரு கிழமைகளில் வரும் பிரதோஷம் பலவிதமான நன்மைகளை தருகிறது.

இந்த ஆண்டு தொடக்கத்திலேயே ஜனவரி 15ந் தேதியும் 29ந் தேதியும் தை மாதத்தில் இரண்டு சனிமகா பிரதோஷ தினங்கள் வருகிறது. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பரமக்குடி

சாலையில் உள்ள குறிச்சி வழிவிடு பெரியநாச்சிஅம்மன் கோவில் வளாகத்தில் காசியில்இருந்து பூஜித்து காசிவிஸ்வநாதர், காசி நந்தி மற்றும் காசிதுர்க்கை காசிகுருபகாவன் போன்ற சன்னதிகள் காசில் எப்படி உள்ளதோ அதேபோல் இங்கு அமைக்கப்பட்டு உள்ளது. பக்தர்கள் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் இங்கு வழங்க படும் கங்கைதீர்த்தால் அபிஷேகம் செய்து சிவபெருமானை தொட்டு வழிபட்டு செல்லலாம்.

ஆண்டு தோறும் காசி கங்கை கரையில் முன்னோர் தர்பணம் திதி போன்றவை குறிச்சி காசிவிஸ்வநாதர் கோவிலில் தை, ஆடி புரட்டாசி அமாவாசை தினங்களில் இங்கு நடைபெறுகிறது.

கோவில் கும்பாபிஷேகத்திற்கும் கங்கை தீர்த்தம் இலவசமாக வழங்கபட்டு வருகிறது.

கோவில் பற்றியும், கும்பாபிஷேகத்திற்கு கங்கை நீர் தேவைப்படுபவர்களும் மேலும் விபரங்கள் அறிய கீழ்கண்ட எண்ணில் தொடர்பு கொள்ளளாம் போன்: 9444159653.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

## புத்தர் பொன்மொழி

- உண்மையை பேசுங்கள். கேட்பவர்களுக்கு இயன்றதைக் கொடுப்பது போன்ற நல்ல செயல்களைச் செய்யுங்கள். இந்த இரு வழிகளாலும் ஒருவன் இறைவனின் சன்னதியை அடையலாம்.
- செயலில் காட்டாமல் ஒருவன் தன்னுடைய வாயால் தேன் ஒழுக பேசுவதால், அழகும் நிறமும் அமையப் பெற்ற மலர், வாசனை இழந்து காணப்படுவது போல் பயனற்றதாகும்.

# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக் கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், ‘நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?’ என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி ‘நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?’ என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரிசாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், ‘என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!’ என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதே மாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்ப வ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீ கரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண் டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.



முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் ஸமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம் பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். ‘பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்’ என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வரானுக்ரஹமும் வரும்.

**எந்தெந்த விதத்தில்முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.**

–தெய்வத்தின் குரல்

ஆன்மிகமலர்

ராமனுக்கு உதவிய அணிலைப் போன்று
ஆன்மிகத்திற்கு எங்கள் சேவை மிகச் சிறியது

# நமது இதழுக்கு பொருளாதார உதவி தேவைப்படுகிறது

ஆன்மிகமலர் டிரஸ்ட் வாயிலாக
ஆன்மிகமலர்.காம், ஆன்மிகமலர் மொபைல்-ஆப்,
இ-புத்தகம் ஆகியவற்றை எந்தவித கட்டணமுமின்றி
அனைவரும் படிக்கும் வகையில் இலவசமாக
வெளியிட்டு வருகிறோம்.

## இதுவரை 130 இதழ்களை கடந்துள்ளோம்.

இன்னும் எங்கள் சேவையை விரிவுபடுத்த
பொருளாதார உதவி தேவைப்படுகிறது.
உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட
வங்கி கணக்கின் மூலம் உதவலாம்.



**ஆன்மிகமலர் டிரஸ்ட்**

Tamilnadu Government Redg.304/2016

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

மேலும் விவரங்களுக்கு 09444228203
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

## மனக்கஷ்டம், பணக்கஷ்டம் மட்டுமல்ல உலகமக்கள் படும் துன்பத்தையும் போக்கும்

# காகபுஜண்டர் அருளிய நற்பவி மந்திரம்

யுகங்கள் மறைந்தாலும், மகா பிரளயத்தினால் உலகமே அழிந்தாலும் தாம் மட்டும் என்றும் மறையாமல், அழியாமல் அனைத்தையும் சாட்சியாய் நோக்கிக் கொண்டிருக்கும் ஒரே மகரிஷி ஸ்ரீ காகபுஜண்ட மகரிஷி.

பல கல்ப கோடி பிரம்மாக்களையும், சிவனையும், விஷ்ணுவையும் பார்த்த பெருமைக்குரியவர். காகபுஜண்டர். இவரை நம்பிக்கையுடன் வணங்கினால் பாவங்கள் அனைத்தையும் போக்கும் வல்லமை பெற்ற மகரிஷி. இவர் உருவாக்கிய மூலமந்திரம் மிகவும் சக்திவாய்ந்ததாக இன்றும் பலர் பல சமயங்களில் பயன்படுத்துகின்றனர்.

"நற்பவி" இது மூல மந்திரம் மட்டுமல்ல, மகிரிஷி காக புஜண்டர் அவர்களால் கொடுக்கபட்ட மூல ஜபமந்திரம்.

நற் – நல்லது,
பவி – பவிக்கட்டும் / உண்டாகட்டும்

என்பதே இதன் பொருள் ஆகும். உலக மக்கள் யாவர்க்கும் நல்லது உண்டாகட்டும் என்ற கருத்தில் உண்டாக்கப்பட்டது.

இந்த மந்திரத்தை நேரம் கிடைக்கும்போதெல் லாம் உச்சரித்தால், சுலபமாக தீங்குகள் அழியும். இந்த மந்திரம் அஸ்திரமாக இருந்து ஜபிப்பவரை காக்கும்.

புருவ மத்திக்கும் மேலே உள்ள ஏழு திரை களை தாண்டி, பேரின்ப நிலையை அடைய "நற்பவி" மந்திரம் பேருதவியாக இருக்கும் என மகிரிஷி காக புஜண்டர் கூறியுள்ளார்.

நற்பவி! நற்பவி!! நற்பவி!!!

என்று சொன்ன ஷணத்தில் இருந்து மகிரிஷி காக புஜண்டர் நம் குறைகளை போக்கி அருள்வார் என்பது அவர் வாக்காலயே அறியபடுகிறது.

நற்பவி என்று ஆழமாக மனதில் சொல்லிக் கொண்டே இருந்தால் போதும் வருங்காலத்தில் நடைபெறும் அனைத்து விஷயங்களும் நன்மை



யாகவே முடியும்.

தீய விஷயங்கள் எப்படி சரி ஆகும் என்று ஆராய வேண்டியதில்லை, நமக்கு ஒரு சில வழிகள்தான் தெரியும், ஆனால் பிரபஞ்சத்திற்கு ஆயிரம் வழிகள் இருக்கும். அது எப்படியும் சரி செய்து விடும்.

நற் – நல்லது,

பவி – பவிக்கட்டும்

நமது இந்த வார்த்தைகள் மற்றும் எண்ணங்கள் பிரபஞ்சத்திற்கு கட்டளைகளாக அனுப்பப்பட்டு எல்லாவற்றையும் சரி செய்துவிடும்.




விதை தூங்காது.

எண்ணியவன் தூங்கி விடுவான் எண்ணம் தூங்காது.

தனி மனிதருக்கு மட்டுமல்ல உலகிற்கே தீங்கு ஏற்படும் சமயங்களில் இந்த "நற்பவி" மந்திரத்தை ஒரு குடும்பமாகவோ அல்லது குழுவாகவோ கூறிவந்தால் ஏற்படவிருக்கும் தீங்கு பஞ்சாக பறந்துவிடும்

காகபுஜண்டர் இந்த மந்திரத்தைப் பற்றி கூறும் போது....

மனிதர்களின் ஆழ்மனதிற்கு உள்ள சக்தி அபரிமிதமானது, இந்த சக்தி பிரபஞ்சத்திற்கு நல்லதை நினைத்து கட்டளையிட்டால் பிரபஞ்ச சக்திகள் மனித ஆழ்மன சக்திக்கு கட்டுப்படும்.

இதைத்தான் காகபுஜண்டர் எளிமையான "நற்பவி" என்பதை மூல ஜப மந்திரமாக உபதேசித்துள்ளார்.

நமக்கு எதிராக எத்தனை பேர் செயல்படுகிறார்கள் என்பதைப் பற்றி பொருட்படுத்த வேண்டாம்.

பயம் மற்றும் குழப்பங்கள் வரும் போது பதட்டமில்லாமல் ஆழ்ந்த அமைதியாக இருக்க இந்த மந்திரத்தை பயன்படுத்தலாம்.

நான் மிகுந்த நம்பிக்கையாக இருக்கிறேன், விரைவில் அதிசயம் நடக்கும், ஏற்படப் போகும் எல்லா அதிசயங்களுக்கும் நன்றி, பிரபஞ்சத்திற்கும் நன்றி என்று மட்டும் ஆழமாக மனதில் சொல்லிக் கொண்டே இருங்கள். நிறுத்தாமல் சொல்லிக் கொண்டே இருங்கள்.

நமது வார்த்தைகள், சந்தோஷமான மற்றும் நம்பிக்கையான உணர்வுகள் மற்றும் எண்ணங்கள் போதும் எல்லாவற்றையும் சரி செய்துவிடும்.

நமது நேர்மறையான சக்தி இந்த பிரபஞ்சத்தைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது என்பதை மட்டும் உணருங்கள்.

விதைத்தவன் தூங்கி விடுவான்


அழகுராஜா

"இது ஒரு மோகன மந்திரம் ஆகும் நற்பவி நற்பவி நற்பவி என்று சொல்லிக்கொண்டே இருக்க தனிமனித கஷ்டங்கள் மட்டுமல்லாது உலக மக்கள் கஷ்டங்கள் அனைத்தும் நீங்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

உங்களுக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் இந்த மந்திரத்தை சொன்னால் உங்கள் கஷ்டங்கள் அடியோடு விலகுவதோடு பணக்கஷ்டம், மனக்கஷ்டம் அனைத்தும் விலகி நிம்மதி பிறக்கும் என்பதாக சொல்லப்பட்டுள்ளது.

கஷ்டப்படும் நேரங்களில் இந்த நற்பவி மந்திரம் மிகச்சிறந்த அஸ்திரம் என சொல்லப்படுகிறது. நற்பவி ஜெபித்தும் அதை பலமுறை எழுதியும் கஷ்டங்களில் இருந்து விடுபட்டோர் ஏராளம்.

இந்த மந்திரம் நிர்விகல்பசமாதியில் இருந்து கிடைத்த ஒரு மோகன மந்திரம் இதை சப்தத்தோடு உச்சரிக்க சொந்த கஷ்டங்கள் மட்டும் இன்றி உலக மக்களின் கஷ்டங்களும் விலகும் என்பது நம்பிக்கை.

தற்போது உலகமே ஒருவித பீதியில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறது. உலகமே ஸ்தம்பித்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது. கொரானா போன்ற இந்த மோசமான காலகட்டங்களில் நற்பவி மந்திரம் ஜெபித்து நல்ல அதிர்வலைகளை உண்டாக்குவோம். வாழ்வில் வெற்றி பெறுவோம்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# 36 தத்துவங்களால் ஆனது உலகம்

அண்ட சராசரத்தின் துவக்க நிலையும் முடிவு நிலையும் சிவம் என்று கருதப்படுகிறது. அப்படி ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானின் இயல்புகளை அனுத்தரம், சித்து, சுவாதந்திரியம், சம்வித்து, சைதன்யம், என்று பல அடைமொழி கொடுத்து சிறப்பிக்கிறது. காஷ்மீர் சைவம் அனுத்தரம் என்ற வார்த்தைக்கு தனக்கு அப்பால் எதுவும் இல்லை என்று பொருள் சொல்லலாம். அதேபோல காலம், இடம், காரண காரியம் எல்லைகளை கடந்த தூய ஒளி பொருந்திய தன்மை இவற்றை சித்து என்ற வார்த்தை குறிக்கிறது. தனது விருப்பப்படி செயல்படுவதற்கு எந்த தடைகளும் இல்லாமல் வரம்பற்ற விடுதலைத் தன்மையை இயல்பிலேயே கொண்டதை சுவாதந்தரியம் என்ற சொல் குறிக்கிறது.



தனக்கு இயல்பாகவே அமைந்த பேரொளி தன்மை என்கின்ற சுயபிரகாசத்தை குறிப்பதோடு அல்லாமல் விகல்பங்கள் அற்ற வேறுபாடுகள் இல்லாத ஞானத்தின் வடிவை சம்வித்து என்பது காட்டுகிறது. சைதன்யம் என்பது ஆக்கும் சக்தி அழிக்கும் சக்தி, மறைக்கும் சக்தி, காக்கும் சக்தி, அருளும் சக்தி ஆகிய ஐவகைத் தன்மைகளையும் தனக்குள் கொண்ட சிவபெருமானின் கருணாவிலாசத்தை சுட்டிக் காட்டுகிறது. இப்படி இறைவனின் தன்மைகளை முற்றும் உணர்ந்து பட்டியலிட்டு சொல்வதிலிருந்து காஷ்மீர் சைவத்தின் மெய்ப்பொருள் தத்துவ விளக்கம் ஆரம்பமாகிறது.

தனது வரம்பற்ற சக்தியாலும், கட்டுத்தளை இல்லாத விருப்பாற்றலினாலும் சிவபெருமான் தன்னிடமிருந்து உலகத்தை படைத்துள்ளார். அவனிடமிருந்து உருவாக்கம் பெற்ற இந்த உலகமானது அவனின் வேறாக கருதப்பட முடியாது.

www.aanmeegamalar.com



யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

கடவுள் உருவாக்கிய மதம்

இறைவன் தன்னை அனுபவிப்பவன், அனுபவிக்கப்படும் பொருள் என்று இரண்டாக வகைப்படுத்தி கொள்கிறான். இதனால் காஷ்மீர் சைவ தத்துவப் படி ஜீவனும் சிவனும் வேறானது அல்ல. கட்டுக்குள் இருக்கும் போது ஜீவனாகவும் கட்டுத்தளைகளை கடந்து ஞான பிழம்பாக நிற்கும் போது சிவனாகவும் காட்சி தருகிறான்.




தானே உலகமானாலும் கூட தன்னிலிருந்து மாறுபட்டது போல் காட்சியளிக்கும் உலகம் 36 தத்துவங்களால் ஆனது. சிவம், சக்தி, சதாசிவம், ஈஸ்வரம், சுத்த வித்தை, என்ற ஐந்தும் சுத்த தத்துவங்களாக கருதப்படுகிறது. இந்த ஐந்தில் சிவ சக்தி தத்துவம் பரிணாமத்தின் ஆதாரமாக இருப்பினும் இருமை மாற்றம் என்று அதை கொள்வது கிடையாது.

தனது சுதந்திரமான சர்வ சக்தியினால் தனக்குள் அடங்கி கிடக்கும் பிரபஞ்சத்தை வெளிப்படும் படி சங்கல்பித்தவுடன் ஏற்படும் முதல் அதிர்வினை சிவ தத்துமாக கொள்கிறார்கள். எல்லாவிதமான தத்துவ மாற்றங்களுக்கும் அடிப்படையாக பிறக்கும் தூய ஞான நிலையான சுத்த சைதன்யம் சிவமாக வெளிப்படுகிறது. சிவத்திலிருந்து வெளிப்படுகின்ற ஆற்றல் சக்தி தத்துவமாக உருமாற்றம் அடைகிறது. பொதுப்படையாக இவ்விரு தத்துவங்களுக்கும் வேறுபாடு இல்லையென்றாலும் சூரியனையும் அதன் வெளிச்சத்தையும் பிரித்து பார்ப்பதை போல் சிவசக்தி தத்துவத்தை வேறுபடுத்தி பார்க்கலாமே தவிர அடிப்படையில் சிவமே சக்தியாகும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

ஆத்மாவும் அனாத்மாவும் தொடர்புறும் நிலையில் சதாசிவ தத்துவம் வெளிப்படுகிறது. சதாசிவத்தின் சைதன்யம் தான் அறியப்படும் பொருளாக அனுபவப்படும் போது நாதுறு என்றும், நேயம் என்றும், இரண்டாக பிரிந்து இச்சை என்றும் விருப்பாற்றல் என்றும் மேம்பட்டு விளங்குகிறது. காஷ்மீர் சைவத்தின் அடுத்ததாக சொல்லப்படும் ஈஸ்வர தத்துவம் ஞானத்தின் முழு ஆற்றலையும் தனக்குள் கொண்டதாகும்.

இறைவனின் அனைத்து கூறுகளையும் அனுபவித்து ஆத்மாவை அவனோடு சமுத்திரத்திற்குள் உப்பு பொம்மை கறைவதை போல் கரைந்து விடுவது இந்த தத்துவப்பிரிவின் சிகரமாகும். அடுத்ததாக உள்ள சுத்தவித்தை என்பது கிரியா சக்தியையும் பேதாபேத அனுபவித்தையும் ஒருமைபட்ட நிலையில் சித்தரித்து காட்டுவதாகும். சிவனுக்கும் ஜீவனுக்கும் உள்ள உண்மையான தொடர்பு சுத்த வித்தையில் தெளிவுபடுத்தபடுகிறது.

நாம் மேலே சொன்ன ஐந்து வகையான தத்துவங்களை சுத்த தத்துவங்கள் என்றும், மீதமுள்ள 31 வகை தத்துவங்களை அசுத்த தத்துவங்கள் என்றும் காஷ்மீர் சைவம் கருதுகிறது. அத்தகைய அசுத்த தத்துவங்களின் படித்தரங்கள் என்னவென்பதை ஆராய்ந்து பார்த்தால் காஷ்மீர் சைவத்தின் முழுமையான வடிவம் நமக்கு கிடைத்துவிடும்.

சிவ அதிர்வினால் உருவான சக்தியின் ஒரு கூறு தான் “மாயை” எனப்படுவது உருவ வேறுபாடுகளுக்கும் பலவிதமான பொருட்களாக காட்சி தருவதற்கும் இறை சக்தியை பயன்பாட்டிற்கு கொண்டுவருவது தான் “மாயா ஆற்றல்” என்று சொல்லப்படுகிறது. “மாயை” என்பது ஒளியாகவும் இருக்கிறது. இருளாகவும் இருக்கிறது. உயிர்களை இறைவன் பால்பக்தி பூர்வமாக நகர்த்தி செல்வது ஒளி மிகுந்த மாயையாகும். பந்த பாசக் கயிறுகளால் ஆத்மாக்களை இறுககட்டி ஜனன, மரண சாகரத்தை நோக்கி நகர்த்துவது இருள் மயமான மாயையாகும்.

உருவமேயில்லாத பரம்பொருளில் இருந்து உருவமுடைய பொருட்கள் உருவாககாரணமாக இருப்பது “மாயை”. இது சித்துப் பொருளின்பௌதீக வடிவாகும். இத்தகைய மாயையில் இருந்து கலை, வித்தை, ராகம், காலம், நியதி ஆகிய ஐந்தும் தோன்றுவதாக காஷ்மீர சைவம் கருதுகிறது.

காஷ்மீர் சைவத்தின் மாயை என்பதில் முதலாவதாக சொல்லப்படும் “கலை” என்றபதம் சாதாரணமாக இயல், இசை, நாடகத்தை சுட்டுவது அல்ல.

சைதன்யம் என்ற அனைத்தையும் படைக்கும் தன்மையின் சக்தியை குறைத்து செயல் தன்மைக்கு எல்லை வகுப்பதாகும். அதே போல் இரண்டாவதாக குறிக்கப்படும் “வித்தை” என்ற வார்த்தை வரம்பற்றதாகிய சிவப்பொருளின் முற்றும் உணரும் அறிவை எல்லை வகுத்து குறைவு செய்வதாகும். ராகம் என்ற மூன்றாவது சொல் சர்வ பூரணத்துவம் என்ற இயல்பினை நிறைவடையாமல் செய்து குறிப்பிட்ட பொருட்களின் மீது இச்சை கொள்ள செய்வதாகும். காலம் என்ற நான்காவது வார்த்தை நித்தியத்துவம்

ஆகிய அழியாத் தன்மையை வரம்புக்கு உட்படுத்துவதாகும். நியதி என்ற ஐந்தாவது சொல் சுதந்திரதன்மையை எங்கும் வியாபித்து உள்ள உணர்வை கட்டுப்படுத்துவதாகும்.

இவ் ஐந்து மாயா சக்தி ஜீவாத்மாக்களின் சிவத் தன்மையை கட்டுப்படுத்தும் உறைகள் அல்லது சட்டைகள் என்று காஷ்மீர் சைவம் சொல்கிறது. மேலும் இந்த ஐந்து தத்துவங்களால் உருவானதே புருஷன் என்றும் கருதுகிறது. கபிலமுனிவர் சாங்கிய தத்துவத்தில் குறிப்பிடும் புருஷன் வேறு காஷ்மீர் சைவம் சொல்லும் புருஷன் வேறு என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இறைவனின் தன்மை, உயிர்களின் இயல்பு ஆகியவற்றை மிக விரிவாக பேசும் காஷ்மீர் சைவம் பிறவிப் பெருங்கடலை கடந்து இறைவனின் பாதார விந்தத்தில் முற்றிலுமாக ஐக்கியமாகும் முக்தி நிலையை பற்றியும் விரிவான சிந்தனையை தருகிறது. பொதுவாக இந்து மதத்தில் உள்ள சமய பிரிவுகளும் சரி, இந்தியாவில் தோன்றிய பௌத்தம், ஜைனம், உள்ளிட்ட வேறுமதங்களும் சரி மனிதன் முக்தி அடைவதற்கு "அவித்தை" என்ற அறியாமைதான் தடையாக இருப்பதாக கருதுகிறது. அதேபோலவே காஷ்மீர் சைவத்திலும் குறைவுடையதும் எல்லைக்கு உட்பட்டதும் ஆகிய அறிவு தான் பந்தங்களுக்கு காரணம் என்பதை விளக்குகிறது. எனவே அறிவுச் செயல்களின் ஆற்றல்களை குறைத்து ஆன்மீக ஞானத்துடன் கூடிய அறிவோடு உணர்வு கலந்த பக்தி வைராக்யத்தை பெறுவதே வீடுபேறுக்கு பெரும் உதவியாக அமையும் என்று கூறப்படுகிறது.



தென்பகுதியில் உள்ள சைவசித்தாந்தகூற்றுப் படிதான் காஷ்மீர் சைவமும் அஞ்ஞானத்திற்கு ஆணவமலமே காரணம் என்று அடித்து கூறுகிறது. பிறப்பு முதல் ஆத்மாவுடன் கலந்துஇருக்கும் ஆணவமலத்தை ஒழித்தால் தா்ன சிவ ஐக்கியம் ஏற்படும். ஆணவ மலம் என்பது மாயை, கர்மம், ஆணவம் ஆகிய மூன்றும் கலந்த ஒரு கலவையாகும். இது ஜீவன்களை அரிசியை மூடியிருக்கம் தவிடு, உமி, முளை, போன்று இறுகபற்றியுள்ளது. தீட்டப்பட்ட அரிசி மீண்டும் முளைப்பதில்லை. அதேபோன்று ஞான வேள்வியல் வாட்டப்பட்ட ஜீவன் மீண்டும் பிறப்பது இல்லை.

மும்மலங்களை ஒழிப்பதே வாழ்க்கையின் நோக்கமாகும் என்று திருமந்திரம் சிவஞான சிந்தியா போன்ற நூல்கள் கூறுவது போலவே காஷ்மீர் சைவமும் கூறுகிறது. மாயை என்ற பெரும் மயக்கத்திலிருந்து விடுபட்டு நீரோடு நீரும் பாலோடு பாலும் கலப்பது போல் பரமாத்மாவோடு ஜீவாத்மாக்களும் கலக்கவேண்டும் என்கிறார் காஷ்மீர் சைவ ஞானி அபிநவகுப்தர்.

இவர் பரம்பொருளோடு இரண்டற கலந்து விட்ட ஞானாத்மாக்களை பரமமுக்தர், அபர முக்தர், ஜீவன்முக்தர் என்றெல்லாம்வகைப்படுத்தி கூறுகிறார். பரமமுக்தர், அபரமுக்தர்ஆகிய நிலையெல்லாம் மனிதன் உடலைவிடுத்து சூட்சம சரீரம் பெற்றபிறகு கிடைக்கும் வரமாகும்.

ஜீவன் முக்தர் என்பது உயிரோடுவாழுகின்ற போதே சிவ சிந்தனையில் முழுமை பெற்றவர்களுக்கு கிடைக்கும் வரப்பிரசாதமாகும். செத்த பிறகு கிடைக்கும் சிவலோகத்தை விட உயிரோடு இருக்கும் பொழுதே கிடைக்கும் ஜீவன் முக்தர் நிலைதான் வாழ்வின் சிகரத்தை தொட்டதற்கு சாட்சியாகும். அதனால் தான் வாழும் போதே சிவனை அடைய வழிசொல்கிறது காஷ்மீர் சைவம்.

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**
மேலும் தொடர்பு கொள்ளவும்
**போன்: 09442426434**

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# 2022 பண்டிகைகள்

| | |
|---|---|
| தை 13 ஜனவரி | வைகுண்ட ஏகாதேசி |
| வெள்ளி 14 ஜனவரி | பொங்கல் |
| செவ்வாய் 18 ஜனவரி | தைப்பூசம் |
| வியாழன் 17 பிப் | மாசி மகம் |
| செவ்வாய் 1 மார்ச் | மகா சிவராத்திரி |
| வெள்ளி 18 மார்ச் | பங்குனி உத்திரம் |
| சனி 2 ஏப்ரல் | உகாதி |
| ஞாயிறு 10 ஏப்ரல் | ஸ்ரீராம நவமி |
| வியாழன் 14 ஏப்ரல் | தமிழ் புத்தாண்டு |
| வெள்ளி 15 ஏப்ரல் | விஷு |
| சனி 16 ஏப் | சித்ரா பௌர்ணமி |
| ஞாயிறு 12 ஜூன் | வைகாசி விசாகம் |
| ஞாயிறு 17 ஜூலை | ஆடி ஆரம்பம் |
| திங்கள் 1 ஆகஸ்ட் | ஆடி பூரம் |
| புதன் 3 ஆகஸ்ட் | ஆடிப் பெருக்கு |
| வெள்ளி 5 ஆகஸ்ட் | வரலக்ஷ்மி விருத்தம் |
| வியாழன் 11 ஆகஸ்ட் | ஆவணி அவிட்டம் |
| செவ்வாய் 16 ஆகஸ்ட் | ஆடி முடிவடைகிறது |
| வெள்ளி 19 ஆகஸ்ட் | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| புதன் 31 ஆகஸ்ட் | விநாயகர் சதுர்த்தி |
| வியாழன் 8 செப் | ஓணம் |
| ஞாயிறு 18 செப் | புரட்டாசி ஆரம்பம் |
| திங்கள் 26 செப் | நவராத்திரி ஆரம்பம் |
| செவ்வாய் 4 அக் | சரஸ்வதி பூஜை |
| திங்கள் 17 அக் | புரட்டாசி முடிகிறது |
| திங்கள் 24 அக் | தீபாவளி |
| செவ்வாய் 25 | கந்த சஷ்டி ஆரம்பம் |
| ஞாயிறு 30 அக் | சூர சம்ஹாரம் |
| செவ்வாய் 6 டிசம்பர் | திருக்கார்த்திகை |
| வெள்ளி 16 டிசம்பர் | மார்கழி ஆரம்பம் |
| திங்கள் 2 ஜனவரி 2023 | வைகுண்ட ஏகாதேசி |

www.aanmeegamalar.com

அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள், மாத இதழ்கள், பப்ளிகேஷன்ஸ் புக் ஓர்க், அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள், போன்றவை தரமாகவும் குறைந்த செலவில் செய்துதரப்படும்

Bhaanrajg Graphics
செல்: +91-8825844033
















# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)-ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# குருதேவரின் ஆசியால் உருவான தொடர்....




ப்ரிய குருதேவருடைய இந்த இனிய பிறந்த நாள் எங்களுக்குச் 'சிறப்பம்சம்' கொண்டதாக உள்ளது.

இந்த 'சிறப்பம்சத்தை' 5.1.2021 அன்று எழுத ஆரம்பித்தேன். இதை எழுதிமுடிக்க ஒரு வாரம் எடுத்துக்கொண்டேன். இதை நான் அவசியம் கூறித்தான் ஆக வேண்டும். இதை நானாக எழுதவில்லை. அன்புத்தந்தை இறைவனும் ப்ரிய குருதேவரும் இதற்கு உதவியவர்கள் அனைவரையும் அருள் செய்ய விரும்பினர். அதனால் என்னை வைத்து எழுதினர். இந்த சிறப்பம்சம் அவர்களுடைய விருப்பமேயாகும்!

''மனித வாழ்வு மேம்படுவதற்காக பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்'' என்ற தலைப்புடைய இத்தொடரை எழுதி வெளியிடுவதற்காக இறைவனும் குருதேவரும், பலர் உருவில் வந்து எனக்குத் தகுந்த நேரத்தில் தேவையானவற்றை பூர்த்தி செய்ய வழிகாட்டியிருக்கின்றனர் என்று நான் உறுதியாகக் கூறுவேன். யார் யார் வந்து எவ்வாறு உதவினர் என்பதை அன்பு குருதேவரின் பிறந்த நாளை முன்னிட்டு சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன்.

2016–ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு கட்டுரை எழுதி அதை வெளியிடுவதற்கென்ற எனது பணிவான கோரிக்கையுடன் சென்னைக்கு ஒரு பத்திரிகைக்கு அனுப்பிவைத்தேன். முதலில் அந்த பப்ளிக்கேஷன் நிர்வாகிகள் வெளியிடுவதாகக் கூறினர். பின்னர் கைவிட்டனர். நான் பலமுறை கைபேசி மூலம் தொடர்புகொண்டேன். அவர்களிடமிருந்து சரியான பதில் எதும் இல்லாததால் நானும் அதைப்பற்றி பின்னர் எதும் பேசவில்லை. அப்பொழுது என் மனம் மிகவும் குழப்பமடைந்த நிலையில், செய்வதறியாமல் தவித்தது, அந்த நேரத்தில் நெய்வேலியில் வசிக்கும் யோகதா மாணவரான அன்பிற்குரிய திருமதி. மாலதி பத்மநாபன், "ஆன்மீக மலர் இ–புத்தகம் பற்றி கூறினார். இந்த இதழ் ஆசிரியரை நீங்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேளுங்கள்,'' என்று கூறி ஆசிரியர் அவர்களுடைய செல் நெம்பரைத் தந்து உதவினார். அவர் 2016 செப்டம்பர் மாதத்தில் ஆன்மீக மலர் வெளியிட ஆரம்பித்திருக்கிறார் என்றும் தாம் அதைப் படித்துக்கொண்டிருப்பதாகவும் கூறினார்.

**122**
**பாகம்**
**பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்**
**மனித வாழ்வு**
**மேம்படுவதற்காக**

அதன் பின்னர் நான் கைபேசி மூலம் ஆசிரியர் அவர்களை தொடர்பு கொண்டு, குருதேவருடைய போதனைகள் அடங்கிய தொடரை வெளியிடும்படி கேட்டுக்கொண்டேன். அதற்கு அவரும் ஒப்புக் கொண்டார். அதன் பின்னர்தான் நான் என் மனக்குழப்பத்திலிருந்தும் சலசலப்பிலிருந்தும் விடுதலையாகி அமைதியானேன்.

பின்னர் 2016 டிசம்பர் மாதத்தில் அன்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு தொடரை அனுப்பி வைத்தேன். அதை 2017 ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அவர் தொடரின் முதல் பாகத்தை வெளியிட்டார். ஜனவரி 5ம் தேதி அன்பு குருதேவருடைய பிறந்த நாள். ஒரு பெரிய மகானுடைய பிறந்த நாளை முன்னிட்டு இந்தத் தொடரை வெளியிட்டதாக இருந்தது. தொடரின் முதல் பாகம் குருதேவருடைய அருளாசிகளுடன் அவரைத் தொட்டுத் தழுவியது போன்று இப்புனிதமான தொடர் வெளியாகியது. இவ்வாறு குருதேவருடைய போதனைகள் அன்புமிக்க ஆசிரியர் அவர்களுடைய ஆன்மீக மலரில் இடம் பிடிக்கப்பட்டது. முதல் தொடரிலேயே இத்தொடருக்காகப் பணி செய்தவர்கள் ஆன நாங்கள் அனைவரும் ப்ரிய குருதேவருடைய கருணைக்கும் அருளுக்கும் பாத்திரமானோம்! ஆசீர்வதிக்கப்பட்டோம்! அதுதான் சிறப்பு.

ஆசிரியர் அவர்களைப்பற்றிக் கூறப் போனால், குருதேவருடைய தேர்வு மிகச் சிறப்பாகவே உள்ளது. எவ்வாறெனில், ஆசிரியர் அவர்களுடைய பணி பிற ஆத்மாக்களின் நன்மைக்காகவே உள்ள தெனத் தெரிய வருகிறது. குருதேவரின் பணியையும் சேர்த்து செய்வதற்காக குருதேவரே அனுப்பி வைத்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

இக்கட்டுரையின் முதல் பாகம் என் கணவரே செலவு செய்து கணினிப்படுத்தி ஆசிரியர் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார். "2-வது பாகத் திலிருந்து நானே கணினிப்படுத்தித் தருகிறேன்; நீங்கள் வீணாகச் செலவு செய்ய வேண்டாம்" என்று நெய்வேலியிலிருக்கும் திருமதி. மாலதி பத்மநாபன் அவர்கள் என்னிடம் கூறியதற்கிணங்க, அவர்கள் 2 மற்றும் 3 பாகங்களை கணினிப்படுத்தித் தந்தார். ஆனால் கடலூரிலிருந்து நெய்வேலிக்கும் நெய் வேலியிலிருந்து கடலூருக்கும் பதிவு அஞ்சல் மூலம் அனுப்புவதும் பெறுவதும் மிகவும் சிரமமாக இருந்தது. "இதற்கு வேறு வழி ஏதும் இல்லையா?" என்று குருதேவரிடம் பிரார்த்தனை செய்தவாறு கேட்டேன். சமீபத்தில் விருப்ப ஓய்வு பெற்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட சார்பதிவாளரும் யோகதா மாணவருமான அன்பிற்குரிய திருமதி. நிர்மலா விஸ்வநாதன் அவர்களை திடீரென்று எதிர்பாராமல் தொடர்பு கொண்டு "தொடரை கணினிப்படுத்துவதற்கு உங்களுக்குத் தெரிந்தவர் கள் யாராவது இருக்கின்றனரா?" என்று நான் கேட்டபோது, "எனக்குத்தெரிந்தவர்கள் யாரும் இல்லை; ஆனால் பத்திரம் எழுத்தாளர் திருவாளர். விஷ்ணுராம்மிடம் கேட்டால் வழிபிறக்கும். நிச்சயம் அவர் செய்வார்." அவர் என் கணவரை குறிப்பிட்டு, "ஐயா சார்பதிவாளராகவும் மாவட்டப்பதிவாளராகவும் பணியாற்றியபொழுது திருவாளர், விஷ்ணுராம்-க்கு (இத்துறைப் பணிகளை கற்றுத்தந்த வகையில்) எவ்வளவோ உதவியிருக்கிறார். அதனால் நீங்கள் கேட்டால் மறுத்து ஏதும் பேசாமல் அவர் உங்களுக்கு உதவுவார்" என்று ஆணித்தரமாகக் கூறினார்.

அதற்கிணங்க நானும் அவரை கைபேசி மூலம் தொடர்பு கொண்டு "எனக்கு நீங்கள் ஓர் உதவி செய்வீர்களா?" என்று கேட்டேன். "உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்," அவர், என் கணவரை குறிப்பிட்டு, "ஐயாவால்தான் நான் இன்று நன்றாக இருக்கிறேன். அதனால் நான் என்ன பணி செய்துத்தரவேண்டும் என்று நீங்கள் என்னிடம் சொல்லுங்கள். அதைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என்று பதிலளித்தார். அதைத் தொடர்ந்து நான் விஷயத்தைக் அவரிடம் கூறினேன். "இவ்வளவுதானா? நீங்கள், கணினிப்படுத்துவதர்க்குண்டானவற்றைக் கொண்டுவந்து சங்கரனிடம் கொடுங்கள். அவர் அதைச் செய்து தருவார், நானும் அவரிடம் சொல்கிறேன்" என்று மிகுந்த அன்புடன் திருவாளர் விஷ்ணுராம் அவர்கள் என்னிடம் கூறினார். அவர் தம் அலுவலகப்பொறுப்பை முழுமை யாக திருவாளர். சங்கரன் அவர்களிடத்தில் ஒப்படைத்துள்ளார். அவர்களிடத்தில் திருவாளர். விஷ்ணுராம் அவர்களுக்கு முழு நம்பிக்கையும் விசுவாசமும் உண்டு. பிறகு திருவாளர். விஷ்ணுராம் அவர்கள் கூறியது போல் திருவாளர். சங்கரன் அவர்கள் வசம் கணினிப்படுத்துவதற்கான தொடரை நான் கொடுத்தேன். தொடரின் 4-வது பாகத்திலிருந்து பணியை திருவாளர். சங்கரன் அவர்கள் செய்தார். பின்னர் அவர் தன் சகோதரரிடம் அப்பணியை ஒப்படைத்தார். நாளடைவில் இருவருக்கும் அவர் கள் பணி செய்யும் அலுவலகத்தில் இருக்கும் வேலைப்பளு காரணமாக இப்பணியை அவர் தன் மனைவி திருமதி.ரேவதி சங்கரன் அவர்களிடம் ஒப்படைத்தார். இன்னும் அவர் இப்பணியை தொடர்ந்து செய்து வருகிறார்.

அவர்களைப்பற்றி கூறப்போனால் அன்புமிக்க திருவாளர். சங்கரன் அவர்கள் மற்றும் திருமதி. ரேவதி சங்கரன், அவர்கள் பிறருக்கு நன்மை செய்பவர்கள். தமக்கு இல்லையென்றாலும் பரவாயில்லை பிறர் நன்மை அடையவேண்டும் என்று நினைப்பவர்கள். தயாளகுணம் இவர்களைத் தழுவுகிறன்றது. "எப்பொழுதும் சிரித்த முகத்துடைய, கள்ளமற்ற உள்ளத்தைக்கொண்ட திருமதி. ரேவதிசங்கரன் அவர்கள் ஒரு பெரிய கூட்டுக்குடும்பத்தில் வாழ்ந்துகொண்டிருப்பவர். இவர் காலையில் தூங்கி எழும் நேரம் முதல் இரவு தூங்கச் செல்லுகின்ற நேரம்வரை வீட்டில் உள்ள பணிகள் அனைத்தையும் இவர்தான்

செய்ய வேண்டும். சில சமயம் உடல்நிலை சரியில்லாதபோதும் நான் கொடுக்கும் தொடரின் திருப்பணியை, சுணக்கமின்றி, சிரித்த முகத்துடன் என்னிடமிருந்து பெற்றுக்கொண்டு அன்புத்தந்தை இறைவனுக்காகவும் ப்ரிய குருதேவருக்காவும், இரவு நேரத்தில் வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் தூங்கியபின்னர் கணினிப்படுத்துதல். மற்றும் அதன் திருத்தம் மேற்கொள்ளுதல் ஆகியவற்றை, செய்து வருகிறார்". இந்தத் தொடருக்காக ஒரு வெள்ளைத்தாள்கூட கொடுக்கும்படி என்னைக் அவர்கள் கேட்டதில்லை. அதற்கான பேப்பர் செலவையும் கூட அவர்களே செய்து திருப்தி அடைகின்றனர். இறைவனிடத்தில் மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் உடையவர்கள். நல்ல உழைப்பாளிகள். இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது இவர்களும் இறைவனின் உண்மையான குழந்தைகளே! இத்திருப்பணி செய்வதற்காக இவர்களையும் அழைத்துள்ளார் குருதேவர்.



குருப்ரியா

இத்தொடரின் பணியை தொடர்ந்து செய்ய முடியாமல் ஓர் இக்கட்டான நிலை நேர்ந்துள்ளது. கொரோனா தீவிரமடைந்து ஊரடங்கு உத்தரவு போட்ட நேரம். நானும் என் கணவரும் சென்னையில் அகப்பட்டோம். ஆறுமாதக்காலம் அங்கிருந்தோம். தொடரை கணினிப்படுத்துவதற்காக கொடுப்பதும் அதன்பின்னர் திருத்தம் மேற்கொள்வதற்காக அதை திரும்பப்பெறுவதும் என் கணவர்தான். ஆரம்பத்தில் சிறிது நாட்கள் அந்தப் பணியை திருவாளர். சங்கரன் அவர்கள் செய்து வந்தார். ஊரடங்கு உத்தரவு போட்ட நேரத்தில் யாரும் வெளியில் போக முடியாமலிருந்ததால் என் கணவர் கடலூருக்குச் செல்லாமல் சென்னையிலேயே இருந்தார். அதனால் தொடரின் வெளியீட்டுப்பணி நின்றுவிடுவதாக ஒரு கட்டம் வந்தது. அப்பொழுது கடலூலிருக்கும் திருமதி. நிர்மலா விஸ்வநாதன் அவர்கள் எற்கனவே கணினிப்படுத்துவதற்கு உதவியதுபோல், இரண்டாவது முறையாக இந்த நேரத்திலும் உதவினார். அவர்களிடம் நானே தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு "தொடர் வெளியீடு நின்றுவிடும் போலிருக்கிறது. என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை" என்று கூறினேன். உடனே, "நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம். அஞ்சல் அலுவலகம் நேற்று திறந்துவிட்டது. நானே கணினிப்படுத்திய தொடரைப்பெற்று, நானே பதிவு அஞ்சல் மூலம் உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன். நீங்கள் அதற்கு வேண்டிய திருத்தங்கள் மேற்கொண்டு எனக்கு திரும்ப அனுப்பி வையுங்கள். அதனை நான் திருமதி. ரேவதி சங்கரன் அவர்கள் வசம் ஒப்டைத்து விடுகிறேன்" என்று அவர்கள் கூறினார். நானும் குருதேவருக்கு மிகுந்த நன்றியைச் செலுத்தி, அவர்கள் கூறியது போல் செய்தேன். அங்கே, அவர்கள் சொன்னதுபோல் ஊரடங்கு உத்தரவு, தளர்வு செய்யும் வரை, அதாவது ஆகஸ்ட் மாதம் முடிய மூன்று மாதங்கள் முழுமையாக இப்பணியை அஞ்சல் அலுவலகச் செலவினை அவர்களே செய்து எனக்கு அனுப்பிவைத்தார்கள். நானும் திருத்தம் மேற்கொண்டு அஞ்சல் மூலம் அவர்களுக்கு அனுப்பிவைத்துக்கொண்டிருந்தேன். தொடரைப்பெறுவதற்கும் திரும்பக்கொடுப்பதற்கும் அங்கே ஒருவரை ஏற்பாடு செய்திருந்தார். அன்று அவர்களை வைத்து குருதேவர் இறைவனின் திருப்பணியை செய்துள்ளார்.

உயர்ந்த உள்ளத்தையும் உயர்ந்த பண்பையும் உடைய திருமதி. நிர்மலா விசுவநாதன் அவர்கள், பெயருக்கேற்றவாறு நிர்மலமான மனதை உடையவர். பிறருக்கு உதவும் மனப்பாங்கு உடையவர். அது மட்டுமின்றி கனிந்த மனப்பான்மையுமுடைய அவர் மிகுந்த அமைதியையும் தெய்வீகஅன்பையும் கொண்டவர். இத்தொடருக்காக பணி செய்தவர் அனைவரும் ஏறத்தாழ ஒரே குணாதிசயங் களைக்கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறாக, இப்பிறவியில் நான் செய்து முடிக்க வேண்டிய இப்பணிக்காக குருதேவர் தாமே பல உருவங்களில் வந்து உதவியிருக்கிறார். இத்திருப்பணி எனக்குக் கிடைத்த பரிசு மட்டுமின்றி இது எனக்கு கிடைத்த பாக்கியமே! இத்திருப்பணியில் என் கணவருக்கும் ஓர் உயர்ந்த பங்கு உண்டு. என் கணவர் பெயர் திருவாளர். ஆ.கலியபெருமாள். இத்திருப்பணிக்காக அனைத்தையும் அவரே முன்னின்று செய்துவருகிறார். இது முற்பிறவிகளில் செய்த, பலனை எதிர்பாராமலுள்ள நல்ல கர்மாவின் பலனேயாகும். இப்பெரும் பணியைச் செய்ய, நாங்கள் அதாவது, அன்பு குருதேவரின் போதனைகள்யடங்கிய தொடர் வெளியிடுவதற்காக பணிச்செய்த நாங்கள் அனைவரும் இறைவனால் பணிக்கப்பட்டுள்ளோம் என்று கூறுவதைவிட இப்பணியைச் செய்ய நாங்கள் அனைவரும் இறைவனால் பணிக்கப்பட்டுள்ளோம் என்பதுதான் உண்மை.

இப்பெரும் திருப்பணியைச் செய்ய கட்டளையிட்ட அன்புத்தந்தை இறைவா! "நாங்கள் என்றென்றும் உம்மை மறவாமல் உம்மைச் சார்ந்தே இருக்க வேண்டும் என அனைவர் சார்பிலும் நான் கேட்டுக்கொள்கின்றேன். இப்பெரும் திருப்பணியைத் தந்த உமக்கு நாங்கள் தலை வணங்குகிறோம். சம்சார வாழ்க்கை வாழ்ந்தாலும் இறைவனையே சார்ந்துள்ள வாழ்க்கை வாழ்ந்தால் அதாவது இறைவனுக்கு முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் அளித்து வாழ்ந்தால்தான்

அவன் மறைமுகமாக உதவுவதையும், அத்துடன் அவன் நிகழ்த்தும் நிகழ்வுகளையும் நாம் நேரடியாகக் காணலாம்.

ஒருவரை குன்றின்மேல் விளக்காக வைப்பதும் மற்றொருவரை கிணற்றிற்குள் கல்லாக வைப்பதும் இறைவனின் பொழுதுபோக்காகும், அல்லது அவனுடைய 'விளையாட்டு' என்று கூறலாம். எனக்கு எதுவும் தெரியாது; உலகம் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நன்றாகத் தெரிகிறது. அது என்னவென்றால், " இந்த உலகத்தில் இறைவனைத்தவிர வேறு எதுவும் நிலைக்காது. வாழ்வின்போதும் அதன் பின்னரும் நம்முடன் நிலைத்திருப்பது ஒன்றே ஒன்று மட்டும்தான். அது அவன் (இறைவன்) மட்டுமேயாவான்."

கர்மாவுமில்லை, பழிபாவங்களுமில்லை. இறைவன் மனிதனைப்படைத்து அவனுக்குள் மாயையையும் வைத்து அவனும் (இறைவன்) குடிகொண்டான். அனைத்தையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால் 'மனிதன்' என்பவன் வெறும் ஜடப்பொருள்; அவன் ஒரு பொம்மை. அவன் என்ன கர்மா செய்வான்? அவனால் என்ன செய்ய முடியும்? இந்த மனிதனானவனுக்குள் புகுந்திருப்பது மாயைதானே! மாயைதானே வினைகளைச் செய்கிறது. இது இறைவனுக்குத் தெரியாமலா நடக்கிறது. மாயையை வைத்து இறைவனே செய்கிறான். "அனைத்தையும் "செய்வதும் நானே! செய்ய வைப்பதும் நானே!" என்று பகவத் கீதையில் பகவான் கிருஷ்ணன் கூறுகிறான். பாவம் மனிதன்! எல்லா பழிகளும் அவன்மேல் விடிகிறது. மனிதன் என்கின்ற பொம்மைக்குள் உட்கார்ந்துகொண்டு நன்றாக விளையாடுகிறான் இறைவன். தனக்கு ஒன்றுமே தெரியாததுபோன்று நடிக்கிறான். 'தான்' அல்ல 'மாயை' தான் செய்கிறது என்றும் சொல்வது போலுள்ளது. ஆனால் இறைவன், 'பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் முறையை நன்றாகவே கையாளுகின்றான். அவனைச் சார்ந்திருப்பவனை இறைவன் ஒன்றும் செய்வதில்லை. ஆனால் சோதிப்பான். சோதனையையும் வென்றால் பின்னர், அவன் இறைவனைச் சார்ந்திருக்கிறான் என்பதில் அவனுக்கு நம்பிக்கை வந்தால் பின்னர் ஒன்றும் செய்யமாட்டான். மனிதனுக்கு ஓர் நல்ல நண்பனாக இருந்து அனைத்தையும் தெரிவிப்பான். இவையெல்லாம் இறைவனின் பொழுதுபோக்கு என்பது தெரியும். நாமே அவனிடத்தில் அன்பு செலுத்தி அவனைச் சார்ந்திருக்கவேண்டும்.

எனக்கு அன்புத் தந்தை இறைவன் கருணை கொண்டு உதவுவதால் நானும் அவனிடத்தில் மிகுந்த அன்புடன் இருக்கின்றேன். நான் அவனிடத்தில் இத்திருப்பணியைச் செய்து உதவியவர்களுக்காக தற்போது மனமுவந்து பிரார்த்தனை செய்தவண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்புத் தந்தையே! இறைவா! ப்ரிய குருதேவா! தங்களின் அன்பான ஆணைக் குட்பட்டு, இவ்வுலகிற்கு மிகத்தேவையானதும் மிக முக்கியமானதும் மிக உன்னதமானதும் மிகச்சிறந்ததும் மிகுந்த புனிதமுடையதுமான (இறைவனை அறிவதற்காகவும் அவனை அடைவதற்காகவும் உள்ள அன்பு குருதேவரின் போதனைகள் அடங்கிய) இத்திருப்பணியை பிறர் பயனடையும்படி செய்து கொண்டிருக்கின்ற தெய்வீக அன்புடைய, அறநெறியுடைய, இறைவிதிகளுக்குட்பட்டு வாழுகின்ற, உயர்ந்த பண்புடைய, ஆன்மீகமலர்.காம் ஆசிரியர் அவர்கள் மற்றும் அவர் குடும்பத்தினரையும், உயர்ந்த உள்ளத்தையும் பண்பையும் உடைய, தார்மீக வாழ்க்கை வாழுகின்ற திருவாளர். சங்கரன் அவர்கள் ரேவதி சங்கரன் மற்றும் அவர் குடும்பத்தினரையும், மேலே கூறப்பட்டுள்ள அதே பண்புகளுடைய அமைதியான மனமுடைய, இறைபக்தியும் குடுபக்தியுமுடைய திருமதி. நிர்மலா விஸ்வநாதன் மற்றும் அவர்கள் குடும்பத்தினரையும், "அன்பு உள்ளமும் ஆன்மீக உணர்வும், குருபக்தியும் உடையவரான திருமதி. மாலதி பத்மநாபன் அவர்கள் இத்தொடருக்காக பணி செய்துள்ளார். இவரையும் இவர் குடும்பத்தினரையும், இத்திருப்பணியைச் செய்வதற்காக, திருவாளர். சங்கரன் அவர்களை நியமித்த திருவாளர். விஷ்ணுராம் அவர்களையும் அவர் குடும்பத்தினரையும், மேலும் இத்திருப்பணிக்காக யார் யார் உதவினர்களோ அவர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் மேலும் புனிதமான இத்தொடரை படித்த, தொடர்ந்து படிக்கின்ற இறைவனின் குழந்தைகளான யோகதா மாணவர்கள் அனைவரையும் அவர்கள் குடும்பத்தினரையும் மேலும் இறைவன் மற்றும் குருதேவருக்கு தொண்டுசெய்தவாறு குடும்பமின்றி தனித்து வாழ்ந்துகொண்டு, குருதேவரின் இப்புனிதத் தொடரை
தொடர்ந்து படிக்கின்ற தெய்வீக அன்புடைய இறைவனின் குழந்தைகளையும் ஆசீர்வதித்து, என்றென்றும் தங்களின் அருட்கரங்களை அவர்களுக்காக நீட்டியவண்ணமும் தங்களின் கிருபாகடாட்சங்களை பொழிந்தவண்ணமும் கனிந்தருளும்படி மிகுந்த ப்ரேமையுடனும் பணிவன்புடனும் தங்களின் நீலத்தாமரை திருப்பாதங்களை வணங்கிவேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தக் கட்டுரையை ப்ரிய குருதேவரின் 'இனிய பிறந்த நாளுக்காக எழுதுகிறேன். அனைவரையும் காத்துரட்சிப்பீராக! அனைவரையும் ஆசீர்வதிப்பீராக!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

# ஐராவதம் வழிபட்ட சிவன்

# நெல்லில் எழுதினால் படிப்பும், பேசாத குழந்தைக்கு பேச்சு தரும் சிவன்

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்கிற முதுமொழிக்கேற்ப எழுத்து அறிவிக்கும் இறைவன் எழுந்தருளும் ஓர் உன்னதத் தலம் தான் இன்னம்பூர் எழுத்தறிநாதர் ஆலயம்.

சோழ தேசத்தின் காவிரி வடகரையின் 45வது தலமாகப் போற்றப்படும் இப்பதி திரு ஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற பெருமையுடையது. சம்பந்தர் பதிகமும், அப்பர் நான்கு பதிகங்களும் இங்கே பாடியுள்ளனர்.

"இன்னம்பர் தான்தோன்றி ஈசனாரே"

"எழுதுங்கீழ் கணக்கு இன்னம்பர் ஈசன்"

என்று போற்றும் அப்பரடிகள், இப்பெருமானை தொழுபவர் பேரறிவும், நற்குணமும் பெறுவர் என்றும், வன்னி, தும்பை கொக்கிறகு, கொன்றை மலர் ஆகிவற்றை சூடிடும் சிவபெருமானே ஏழு உலகங்களையும் படைத்தவர் என்றும் எடுத்துக் கூறுகின்றார்.

"என்னில் யாரும்" எனத் தொடங்கும் பாடலில் என்னைக் காட்டிலும் எனக்கு இனிமையானவன் இன்னம்பர் ஈசனே என அற்புதமாகப் பாடியுள்ளார் ஆளுடைய அரசர். நல்லோர் கணக்கினையும், தீயோர் கணக்கையும் தன்பால் வைத்து, தக்க முறையில் அருள்புரிபவர் ஈசனே என்பதை ஆணித்தரமாக பகர்கின்றார்.

இன்னும் ஈசனைக் குறித்த எத்தனையோ தகவல்களை இத்தல பதிகங்கள் நான்கிலும்







www.aanmeegamalar.com

பதித்துள்ளார் திருநாவுக்கரசர்.

சூரியனின் வழிபாடு:

யுகந்தோறும் பிரபஞ்ச வெளியில் கிரகங்களுக்கு எல்லாம் ஒளி தந்த கதிரவன், ஒரு சமயம் ஒளி மழுங்கத் தொடங்கினான். இதற்கு விமோசனமாக சிவனாரை வழிபட எண்ணிய சூரியன், செண்பகாரண்யம் என்றழைக்கப்பட்ட இந்த தலத்திற்கு நம்பிக்கையோடு வந்து தான் தோன்றியப் பெருமானை வழிபட்டு... மீண்டும் தனது ஒளியினைக் கூட்டிக் கொண்டதாக தலபுராணம் கூறுகிறது. இனன் (சூரியன்) நம்பி வழிபட்டு, பலன் பெற்றதால் இத்தலம் இன்னம்பர் என்றிருந்து தற்போது இன்னம்பூர் என்று அழைக்கப்படுகிறது.

ஐராவதம் வழிபட்டது :

வெள்ளை யானையாக தேவலோகத்தில் வலம் வந்த ஐராவதம் துர்வாச முனிவரால் சாபம் பெற்று, கருநிறக் காட்டு யானையாக பூமியில் சுற்றித் திரிந்தது. அப்போது இந்த செண்பகக் காட்டில் சுயம்புவாக எழுந்த சிவலிங்கத்தைக் கண்டு, வணங்கி, வழிபட்டு வந்தது. பூர்வ ஜென்ம வாசனையால் தீர்த்தம் உண்டாக்கி, தினந்தோறும் அந்நீரால் அபிஷேகித்து, வாசமிக்க மலர்களைச் சாற்றி, பூஜை புரிந்தது. தனது பெரு உடலால் ஈசனுக்கு நிழலாக நின்றது. அவரது கருணையால் சாப விமோசனம் பெற்று விண்ணுலகு அடைந்தது.

தானே பூமியில் இருந்து தோன்றியதால் தான் தோன்றீஸ்வரர் என்றும், ஐராவதம் வழிபட்டதால் ஐராவதேஸ்வரர் என்றும், இத்தல பெருமான் போற்றலானார். ஐராவதம் ஏற்படுத்திய தீர்த்தம் அதன் பெயரிலேயே ஐராவத தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

அகத்தியர் பெற்ற வரங்கள்:

குறுமுனியாம் அகத்தியர் வடக்கிலிருந்து தென்திசை நோக்கி வரும் சமயம் பற்பல சிவலிங்கங்களைப் பூஜித்து வந்தார். அவ்வாறு செண்பகாரண்யம் அடைந்த அகத்திய மாமுனிகள் ஸ்ரீ ஐராவதேஸ்வரரையும் பூஜிக்கலானார்.

சித்தினாலும், தவத்தினாலும் சிறப்புப்பெற்ற கும்பமுனி, தேன் தமிழால் திகட்டாத தீஞ்சுவைப் பாடல்களைப் புனைந்திட வேண்டுமென எத்தனித்தார் இறைவன். அவர் முன்னே காட்சி கொடுத்து, தமிழ் எழுத்துக்களைக் கற்பித்து, தமிழ் இலக்கணம் முழுவதையும் போதித்தார். சங்கத்தமிழ் வளர்த்த சங்கரனது அருளால் தமிழ் அட்சரங்களைக் கற்று, இலக்கணத்தின் ஆணிவேர்களை புரிந்துத் தேர்ந்தார் அகத்தியர். பின்னர் தமிழில் பாக்கள் பல புனைந்து பலருக்கும் ஞான குருவானார்.

அதுமுதல் இத்தல ஈசன் வடமொழியில் அக்ஷர புரீஸ்வரர் என்றும், செந்தமிழில் எழுத்தறிநாதர் என்றும் பெயர் பெற்றார்.

சுதன்மனை ஆட்கொண்டது:

சுதன்மன் என்கிற அந்தனன் சிறந்த சிவ பக்தன். இன்னம்பர் ஈசன் மீது இணைபிரியா காதல் கொண்டவன். நித்திய பூஜையோடு, ஆலய நிர்வாகமும் பார்த்து வந்தான். அப்போது ஆட்சி புரிந்துவந்த சோழமன்னன் இன்னம்பூர் ஆலயத்தின் கணக்குகளை எடுத்துவந்து காண்பித்து, கையொப்பம் பெற்றிட, தகவல் தெரிவித்தான்.

ஆனால் சூதுவாதறியாத சுதன்மன் எந்த கணக்கையும் இதுவரை எழுதி வைத்ததில்லை.

வரும் வருவாயை தனக்கென்று செலவு செய்யாமல், ஆலயத்திற்கே செலவிட்டான். ஆண்டவன் பணிக்கே தன்னை அர்ப்பணித்தான்.

அரசரது ஆணையைக்கேட்டு அரண்டு போன சுதன்மன், அரனார் பாதக்கமலம் பற்றி அழுதான். அடியாரை அவ்வளவு எளிதில் விட்டுவிடுவாரா அந்த ஆடலரசன் ?

கருவறை லிங்கத்தின் கீழே ஓர் ஓலைச்சுவடிக் கட்டினைக் காட்டியருளினார். அதைக்கொண்டு அரசனிடம் காட்டிடக் கருணை புரிந்தார். சுவடிக்கட்டினை எடுத்துச் சென்ற சுதன்மன் அரசனை சந்தித்து, அவர்முன் சமர்ப்பித்தான்.

அச்சுவடிகளைப் பிரித்துப்பார்த்த அரசன் அக்கோவில் கணக்குகள் எதுவும் விளங்காமல் குழம்பினான். வேலை மிகுதியால் மறுநாள் இக்கணக்குகளை விவரிக்கும்படி சுதன்மனிடன் கூறி அனுப்பினான் மன்னன்.

விபரமா? கணக்கே எழுத்தாதவனுக்கு விபரம் எப்படித் தெரியும்? கலக்கம் கொண்டவனாய் கயிலைநாதன் கழலடியில் வீழ்ந்துக் கதறினான். மயக்கமுற்றான்.

மறுநாள் காலை அரசர்முன் சென்று கணக்கு களைத் தெள்ளத்தெளிவாக விளக்கினான் சுதன்மன். அரசன் இதுவரைக் கேட்டுத்தெளிந் தில்லை இப்படியொரு கணக்கினை...!அப்படிப் பட்டத் திருத்தமான கணக்கினைக் கேட்டுத் திக்குமுக்காடினான் சோழ வேந்தன். சுதன் மனைப் பாராட்டி, மகிழ்ந்தான்.

சன்னிதியில் வீழ்ந்துக் கிடந்த சுதன்மனது கனவில் எழுந்த எழுத்தறிநாதர் அரசனது சந்தேகங்கள் சரி செய்யப்பட்டது என அருள் மொழிந்தார்.

கண்விழித்தவன் ஏதும் விளங்காமல் அரசனைக் காணச் சென்றான். அரசனோ.... இன்னம்பர் கணக்குகளை இனிதே தெளிவித்த தங்களுக்கு வேண்டும் பொருளினைக் கேளுங்கள். அளிக்கக் காத்திருக்கிறேன் என்றான்.

அப்போது புரிந்தது சுதன்மனுக்கு எழுத்தறிநாதரின் திருவிளையாட்டு. இன்னம்பரீசர் தாள்பணிந்து, இனிதே நடத்தினான் தனது திருச்சேவையினை...!

அடியாரை சோதிப்பதும், பின்னர் அருள்புரிவ தும்தான் இனிப்பான வேலையாயிற்றே ஈசர்க்கு...!

ஆலயம்:

ஊரின் நடுவே நாற்புறமும் உயர்ந்த மதில்கள் சூழ்ந்து, கிழக்கே ஐந்துநிலை அழகிய இராஜகோபுரத்துடன் அற்புதமாய் திகழ்கிறது, இரு அம்மன் சன்னிதிகள் கொண்ட ஆலயம்.

உள்ளே... முதலில் கணபதி தரிசனம். பின் பலிபீடம். இடப்புறமாக சற்று ஒதுங்கியபடி தரைதளத்தில் அமர்ந்து அருள்புரியும் நந்திதேவர்.

வலப்பக்கம் தனியே சன்னிதி கொண்டு பேரருள் புரிகின்றாள் ஸ்ரீ சுகந்த குந்தலாம்பாள். வாசனை வீசும் கூந்தலை உடையவள் என்பது இதன் பொருள். அக்ஷமாலை, நீலோற்பல புஷ்பம் மற்றும் அபய வரத அஸ்தங்களுடன் எழில் சிந்தும் அம்பிகையின் தரிசனம் நமை ஏதோ ஒரு தெய்வீக உலகிற்கு அழைத்துச் செல்கின்றது.

நந்தியம்பெருமானை வணங்கி மேலே செல்ல... விதானத்தில் ரிஷபாரூடர். உடன் சுதன்மன், அகத்தியர், சூரியன், திருநாவுக்கரசர் என அருட்காட்சி அளிக்கின்றனர். இரண்டு பெரும் பிரகாரங்களைக் கொண்டுள்ளது. வெளிப்பிராகாரத்தில் நந்தவனம் அமைக்கப்பட் டுள்ளது.

உள்பிரகாரம் மூடுதளத்துடன் கூடியமகா மண்டபம், ஸ்நபன மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என நீண்டுள்ளது. இத்தலத்தின் மற்றுமொரு அம்பிகையான ஸ்ரீ நித்ய கல்யாணி அம்பிகை மகா மண்டபத்தின் வலப்புறம் தென்முகம் காட்டி அருள் மழை பொழிகிறாள். மங்களங்களை அள்ளித்தரும் இந்த நாயகி கல்யாண வரப்பிரசாதியாகத் திகழ்கின் றாள். ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத் தில் 388வது நாமாவளியாக வருகிறது இந்த அம்பிகையின் பெயர். பக்தர்களுக்கு நித்திய போகங்களை அருளி, என்றும் தீர்க்க சுமங்கலி யாக விளங்குகின்றாள் இந்த நாயகி...!

இறைவன் குடிகொண்டள்ள கருவறை மிகவும் விசாலமானது. ஐராவதம் பூஜித்தக் காரணத்தால் யானை புகும் அளவிற்கு விசாலமாக அமைத்துள்ளனர் இந்த கருவறை யை...!



மோ.கணேஷ்

மூலஸ்தானத்தில் பிரம்மாண்ட மான லிங்க உருவில் எழுந்தருள் புரிகின்றார் ஸ்ரீஅக்ஷரபுரீஸ்வரர். சாந்தமே வடிவாய் விளங்கும் இப்பெருமான், சாதனைகள் பல புரிய வழிவகுப்பவர். தனது அன்பர் கணக்கினை எழுதி வைத்துக் கொண்டு தனதடி தொழும் அடியார் வாழ்வில் அற்புதங்கள் பல நிகழ்த்துபவர். அருமையான அரனார் தரிசனம் முடித்து ஆலய வலம் வருகின்றோம்.

தென்மேற்கு மூலையில் தல கணபதியான கன்னிமூல கணபதி

வீற்றருள்கின்றார். பின் வாகன கொட்டடி. ஸ்ரீ பாலசுப்பிரமணியரின் தனிக் கோவில். வடமேற்கில் ஸ்ரீ கஜலட்சுமி. தாழ்வாரத்தில் லிங்கத் திருமேனிகள்.

கோஷ்ட பரிவாரங்களோடு, மாடத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ நடராஜர், கால பைரவர் என அனேக சிலா ரூபங்கள் அமைந்துள்ளன.

ஐந்து கலசங்கள் கொண்ட விமானம் கஜபிருஷ்ட விமானமாக உள்ளது. அற்புத வேலைபாடுகள் கொண்ட இந்த விமானத் தின் முன்புறம்.... ரிஷபாரூடர் நடுவே திகழ.....இச்சா கிரியா சக்திகள் இருபக்கமும் வீற்றிருக்க.... சுதன்மனும், சோழ மன்னனும் வணங்கிய வண்ணம் உள்ளனர்.

இங்கு சோழ மன்னன் இராஜகேசரிவர்மன் மற்றும் விஜயநகர மன்னன் வீரகம்பண்ண உடையார் காலத்திய இரு கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

சோழர் கல்வெட்டில் இவ்வூர்..... "வடகரை இன்னம்பர் நாட்டு இன்னம்பர்" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இத்தலத்தின் விருட்சமாக செண்பக மரமும், தீர்த்தமாக ஐராவத தீர்த்தமும் விளங்குகின்றது.

பிரதோஷம், ஆனி மாதம் திருக்கல்யாண வைபவம், கார்த்திகை முதல் ஞாயிறு, பங்குனி உத்திர தீர்த்தவாரி, சிவராத்திரி, நவராத்திரி, ஆருத்ரா ஆகியன விசேடமாக அனுசரிக்கப்படுகின்றன.

பங்குனி மாதம் 13, 14, 15 ஆவணி மாதம் 31 மற்றும் புரட்டாசி 12 ஆகிய தேதிகளில் சூரியனின் சுடரொளிப் படரும் சூரியபூஜை நடைபெறுகின்றது. அச்சமயம் விழாக்கோலம் பூண்டிருக்கும் இக்கோவில்.

சுவாமிமலை ஸ்ரீ சுவாமிநாதசுவாமி ஆலயத் தின் இணைக் கோவிலாக திகழ்கிறது. தினமும் இங்கு நான்கு கால பூஜைகள் நடத்தப்படுகின்றது. தினசரி காலை 7 மணி முதல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் 8 மணி வரையும் ஆலயம் திறந்திருக்கும்.




இத்தலத்திற்கு அருகே தேவாரத் தலமான திருப்புறம்பியம் அமைந்துள்ளது.

வளர்ந்த குழந்தைகள் பேசும் வயதினை அடைந்த பின்பும், பேசாமலிருந்தால், இன்னம்பூர் அழைத்து வந்து, எழுத்தறிநாதர் சன்னிதானத்தில்... ஓம் அக்ஷரபுரீஸ்வராய நமஹ, அகஸ்தியாய நமஹ, ஸரஸ்வத்யை நமஹ என்று குழந்தையின் நாக்கில் நெல்லினால் ஆலய சிவாச்சாரியார் கையினால் எழுதப் பெற்றால் அடுத்த சில தினங்களிலேயே அக்குழந்தை பேசத் தொடங்கிவிடுகின்றன.

ஆரம்பக் கல்வி பயிலத் தொடங்கும்முன் குழந்தைகளை இக்கோவிலுக்கு அழைத்து வந்து, தாம்பாளத்தில் பரப்பிய நெல்லில் "ஓம் அக்ஷரபுரீஸ்வராய நமஹ" என்று விரலைப் பிடித்து எழுதவைத்து வித்யா அப்யாசத்தைத் தொடங்கிவைக்கும் நிகழ்வு இன்றளவும் இங்கே நடந்து வருகின்றது.

விஜயதசமியன்று அருகில் இருக்கும் ஊர்களில் இருந்து பல குழந்தைகள் இங்கு வந்து முதல் எழுத்தாக இன்னம்பர் ஈசர் பெயரினை எழுதி, தங்கள் குழந்தைகள் கல்வியில் சிறக்க வேண்டிச் செல்கின்றனர்.

இத்தல பெருமானுக்கு வில்வ மாலை சூட்டி, நோட்டு புத்தகம் மற்றும் பேனாவை வைத்து வழிபட....படித்ததெல்லாம் நன்கு மனதில் பதியும். இதனால் எளிதில் தேர்ச்சி பெறலாம். முக்கியமாக கணிதப் பாடத்தில் நன்கு தேர்ச்சியடையலாம்.

தேர்வில் வெற்றி பெறவும், மேற்படிப்பினை தேர்வு செய்து படிக்கவும், வெளிநாடு சென்று படிக்கவும் எழுத்தறிநாதரை வேண்டிக்கொள்ள கைமேல் பலன் கிடைக்கும்.

உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வழிபட உகந்த திருத்தலம் இது.

பூர்வஜென்ம பாப விமோசனம் மற்றும் திருமண தடை போக்கும் தலமாகவும் திகழ்கிறது இன்னம்பூர்.

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தாலுகாவில், கும்பகோணம் சுவாமிமலை பேருந்து சாலையில் உள்ள புளியஞ்சேரியில் இருந்து வடக்கே இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இன்னம்பூர் எழுத்தறிநாதர் ஆலயம்.

ஜோதிட கலாநிதி.
மோ.கணேஷ் குருக்கள், ஆரணி.
தொடர்புக்கு: 9789156179.

# இனிப்பு என்பது வெல்லத்தின் தன்மை! உனது தன்மை என்ன?

ஒரு பொருளைக் கண்ணால் பார்க்காமல் அது இருப்பதாக அனுமானித்து நம்பிக்கையோடு கடவுளை நம்புவது என்பது தானாக தோன்றுகின்ற ஒரு எண்ணமா? இல்லையேல் விஞ்ஞான ஆராய்ச்சி போல் கடவுள் ஆராய்ச்சியும் தொடர் ஆராய்ச்சி நிலையில் உள்ள களமா அது? இரண்டும் ஒன்றா சொல்லுங்கள். விஞ்ஞானத்தில் ஒன்றை நம்பி ஒரு வழியில் ஆராய்வது என்பது உண்டு. இதுபோல தான் கடவுளுக்கும் இருக்கிறதா? விஞ்ஞானக்கல்வி போன்று தான் கடவுட் கல்வியும் ஒரு முறைப்படுத்தப்பட்ட கல்வியா? சொல்லவும்.

❖❖❖

மதங்கள் அவையவைகளின் தத்துவங்களின்படி வகைப் படுத்தப்பட்டு கடவுளை விளக்குவதில் ஒவ்வொன்றும் ஒரு முறையை கொண்டுள்ளன. அதன்படி கிறிஸ்துவமதம், இஸ்லாம், பௌத்தம், ஜைனம், ஜூடாயிஸம், இஸ்லாமிய சூபி சித்தாந்தம் பிறகு இந்துமதங்கள் இவைகளை விடக்கூடாது. இவைகளனைத்தும் மதங்களே. மனிதன் இவைகளின் மீது நம்பிக்கை வைத்து ஒன்று இவைகளை கொள்ள வேண்டும். அல்லது அவைகளைத் தள்ள வேண்டும். அது அவனுடைய பிறப்புரிமை. நம்பிக்கையே இல்லாமல் உலகில் ஒன்றையும் செய்ய முடியாது. கண்டுபிடிக்கவும் முடியாது.

❖❖❖

பிறரிடம் மிகவும் அன்பாய் இருப்பது என்பது ஓரளவு அதா வது சிறிய அளவு நன்மைகளைத் தரும் குணமே அது ஆகும். நன்மைகளைத் தரும் குணத்திற்கு நன்மைகள் என்பதே அதன் கரு. அதையே நன்மை என்கிறோம். தீமை என்பது இதற்கு எதிரிடையானது. உன்னிடம் நன்மையைத் தரும் குணமே இருக்க வேண்டும்.



❖❖❖

நன்மையை தருகின்ற கருத்திற்கு தமிழிலும் வடமொழியிலும் குணம் என்று பெயர். இதற்கு ஈடான சொல் உலக மொழிகளில் ஆங்கிலம் உட்பட எதிலுமே சரியான பதம் கிடையாது. மற்ற மொழிகளில் வேறு வார்த்தைகளில் இக்கருத்தைக் குறிப்பிடுகிறார்கள். ஆங்கிலமொழி ஓரளவு குணத்தை ஒரு வாரியாக ஒரு சொல்லினால் தன்மை அல்லது தரம் என்று குறிப்பிடுகிறது. ஆகவே குணம் என்பது மனிதனின் தன்மையாகியது.

❖❖❖

ஒரு சிறிதளவு நல்லவனாய் இருப்பது என்பதே நன்மை என்ற தன்மை ஆகும். இதையே நற்குணம் என்கிறார்கள்.

❖❖❖

ஒரு வெல்லக்கட்டி அதை எப்பக்கத்தில் கடித்தாலும் அது எந்த ஊரில் கிடைக்கின்ற வெல்லமாயினும் சரி எங்கும் தித்திப் பாகவே இருக்கும். இதுதான் தன்மையின் விளக்கம். இனிப்பு என்பது வெல்லத்தின் தன்மை. உனது தன்மை என்ன? வேறு தன்மை வெல்லக்கட்டியினிடம் சிறிது கூட இருக்காது. அதன் இயற் கையே இனிப்புதான். இது தான் தரமான பொருள்களின் தரம். இனி தரமும் தன்மையும் ஒன்றல்லவா? நண்பனே உனது தரமென்ன? தன்மையென்ன?

❖❖❖

நற்குணம் என்ற இனிப்பான தன்மை இயற்கையாக வருவது. இயற்கையாக

உள்ளது. இது சில பல மனிதர்களின் இரத்தத்தில் பிறப்பு முதல் இருந்து வருகிறது. ஆகவே உதிரத்தில் உள்ள தன்மை மூளைக்குள் சிந்தனையாகப் பரவி அதுவே நற்குணம் என்ற தன்மையாகிறது. இதற்கே சத்துவகுணம் என்று பெயர். அதனால் தான் உலகில் கெட்ட தன்மைகளை உள்ள மனிதர்களைப் போன்று நல்ல தன்மை உள்ள மனிதர்களும் இருக்கிறார்கள். அனைத்திற்கும் காரணம் பிறப்பு வழி இரத்தமே.

❖❖❖

நற்குணம் என்ற தன்மையை கொண்ட மக்கள் எப்பொழுதும் சிறிதளவேனும் எந்த ரூபத்திலாயினும் சமுதாயத்திற்கு நன்மையைச் செய்து விடுகிறார்கள். இதுதான் நல்ல தன்மையின் குணமாகும்.

❖❖❖

தயவு செய்து நீ உன்னை ஒரு நல்ல மனிதனாகவும் நற்குணம் படைத்தவனாகவும் உடனே மாற்றிகொண்டுவிடு. அதற்கு அடுத்தாற்போல் உன்னிடம் உள்ள எல்லா கெட்ட குணங்களையும் உடனே விட்டு விடு.

❖❖❖

நற்குணம் அல்லது நல்ல தன்மை என்பது உனக்கு உலகப் புகழை கொண்டு வந்து தருகிறது. உனக்கும் உலகிலுள்ள அனைவருக்கும் அமைதியைக் கொடுத்து விடுகிறது.

❖❖❖

நற்குணம் என்ற நல்ல தன்மையில் பல இருக்கின்றன. பல என்ற சொல்லுக்கு என்ற அர்த்தம் தெரியுமா? தன்மையிலுள்ள தன்மை என்ற குணத்தை பகுதி பகுதியாக எடுத்து ஆராயலாம். ஆராய்ந்து அதை குணநலன்களாக எடுத்துச் சொல்லலாம். இத்தகு ஆராய்ச்சியையும் ஆராய்ச்சி செய்யும் தன்மையையும் நற்குணத்தில் காணலாமே. இதுதானே அதன் பெருமை.

❖❖❖

நற்குணமும் நல்ல தன்மையும் செய்யும் நன்மைகளும் அதைக் கொண்ட உலகமும் அதிலே உள்ள நீயும் ஆண்டவனின் மிக மிக அருகாமையில் இருக்கிறீர்கள். இதுவே எனது வாழ்த்து.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்

**N.P.சந்திரன்**

**C.V. நடராஜன்**

செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்

**aanmeegamalar.com**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்

**9444228203**








# முருகனின் ஆறுபடைவீடும்

# தஞ்சை ஆறுபடைவீடும்

முருகன் என்றாலே தமிழகத்தின் பிரதான தெய்வமாகவும், தமிழகத்தில் ஆறுபடை வீடுகளைக் கொண்ட தெய்வமாக விளங்குகிறார். அந்தவகையில் தமிழகத்தில் கீழ்கண்ட ஆறு கோவில்களும் ஆறுபடைவீடுகளாக வழங்கப்பட்டாலும், தஞ்சையில் மட்டுமே ஆறுபடை வீடுகளையும் கொண்டுள்ளார் முருகன் என்பது சிறப்பு.

முதலில் முருகனுக்குரிய ஆறுபடைவீடுகளைப் பார்த்தபின் தஞ்சையில் உள்ள ஆறுபடை வீடுகளை விரிவாக பார்ப்போம்.

### திருப்பரங்குன்றம்

அறுபடை வீடுகளில் முதலும் மூலாதாரமுமான திருத்தலம் இது. முருகப்பெருமான் சூரனை வதம் செய்தபின், இந்திரனின் மகள் தெய்வானையை கைப்பற்றிய சிறப்புமிகு தலம் திருப்பரங்குன்றம். அழகில் சிறந்த முருகன் தனது மனைவி தெய்வானையுடன் திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார்.

### திருச்செந்தூர்

முருகன் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளில், இரண்டாவது தலம். கடற்கரையோரம் எழிலாக அமைந்திருக்கும் இந்த ஆலயம், சூரபதுமனை முருகப்பெருமான் அழித்த இடம். இங்கு ராஜ அலங்காரத்தில் சண்முகனாக, கைகளில் அன்னை தந்த வேல் தாங்கி வெற்றிவீரனாக அருள்கிறார் முருகப்பெருமான்.

### திருவாவினன்குடி (பழநி)

கந்தனின் அறுபடை வீடுகளில் மூன்றாவது தலம் இது. பழநி மலையடிவாரத்தில் சற்று மேல் புறத்தில் அமைந்துள்ளது திருவாவினன்குடி ஆலயம். திருமகளும், அலைமகளும், காமதேனுவும் பூஜித்த தலம். மலை உச்சியில் அமைந்துள்ள பாலதண்டாயுதபாணி சிலை நவபாஷாணத்தால் செய்யப்பட்டது. இதனைச் செய்தவர் சித்தர்களில் ஒருவரான போகர்.

### திருவேரகம் (சுவாமிமலை)

முருகப்பெருமான், தன் தந்தையானஈசனுக்கே உப தேசம் செய்த தலமான சுவாமிமலை. இது அறுபடை வீடுகளில் நான்காவதாக குறிப்பிடப் படுகிறது. சுவாமி என்பது இங்கு எல்லோருக்கும் பெரியவனாகிய சிவபெருமானையேக் குறிக்கிறது. இருப்பினும் மகனுக்கு சீடனாக இருந்து ஈஸ்வரன் உபதேசம் பெற்றதால், குருவாகிய முருகனுக்கு மேலே உயரத்தில் சன்னிதியும், கீழே சிவனுக்கு சன்னிதியும் அமைந்துள்ளது. இங்கு உள்ள 64 படிகளில் 60 படிகள் 60 ஆண்டுகளையும், 4 படிகள் 4 யுகங்களையும் குறிப்பதாக அமைக்கப் பட்டிருக்கிறது.

### பழமுதிர்சோலை (அழகர்மலை)

அறுபடைவீடுகளில் முருக பக்தர்களின் மனம்கவரும் வகையில் அமைந்த தலம் இது. பசுமையான சூழலில் மலை மீது அமைந்துள்ள இந்த ஆலயத்தில் வள்ளிதெய்வானையுடன் தம்பதி சமேதராக முருகப்பெருமான் அருள்புரிந்து வருகிறார். அழகர்கோவிலுக்கு மேலே சுமார் நான்கு கிலோமீட்டர் உயரத்தில் இக்கோவில் அமைந்துள்ளது.

### திருத்தணி

சூரபதுமனையும், அவனது சகோதரர்களான சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோரையும் முருகப்பெருமான் வதம் செய்தார். அவர்களின் அழிவு வழி போர்க் கோலத்துடன் ஆவேசமாக இருந்த முருகப்பெருமான், தன்னுடைய கோபம் தணிய வந்து அமர்ந்த தலம் திருத்தணி.'செரு' என்றால்கோபம்,'தணி' என்றால்'குறைதல்' என்றும் பொருள். முன்காலத்தில்'செருத்தணி' என்று அழைக்கப்பட்டு வந்த ஊரேதற்போது 'திருத்தணி' என்று வழங்கப்படுவதாககூறுகிறார்கள்.

மேற்கண்ட ஆறுபடைவீடுகளைப் போன்று தஞ்சாவூர் மாநகரிலும் முருகப்பெருமானுக்கு ஆறு படைவீடுகள் இருக்கிறது.

இந்த ஆறு கோவில்களும் தஞ்சாவூருக் குள்ளேயே அமைந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் தஞ்சை பகுதியைச் சேர்ந்த பக்தர்கள், இந்த ஆறு படைவீடுகளுக்கும் பாத யாத்திரையாக சென்று வழிபடுவது வழக்கம்.

## தஞ்சையில் உள்ள ஆறுபடை வீடுகளைப்பற்றி பார்ப்போம்

### முதலாம் படைவீடு




தஞ்சை மேல அலங்கம் பகுதியில் உள்ளது, சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில். இந்த ஆலய மூலவர், குன்றின் மேல் இருப்பது போல் உயரமான இடத்தில் இருப்பதால், இத்தலம் 'திருப்பரங்குன்றம்' என்று அழைக்கப்படுகிறது. இங்கு வள்ளி தெய்வானையுடன் திருமணக் கோலத்தில் முருகப்பெருமான் காட்சி அளிக்கிறார். இதுதவிர விநாயகர், இடும்பன், சிவன், பார்வதி, சிவலிங்கம் திருமேனிகளும் காணப்படுகின்றன. இக்கோவில் தஞ்சை அரண்மனை தேவஸ்தான கட்டுப்பாட்டில் உள்ளது.

நாயக்க மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கோவில், 250 ஆண்டுகள் பழமையானது. சூரசம்ஹாரம், பங்குனி உத்திரம், தைப்பூசம் போன்ற விழாக்கள் இங்கு வெகு விமரிசையாக நடைபெறும். நாயக்க மன்னர்கள் போருக்கு செல்வதற்கு முன்பாக இங்கு ஆயுதங்களை வைத்து வழிபட்டு எடுத்துச் செல்வதை வழக்கமாக வைத்திருந்ததாக சொல்லப்படுகிறது.

### இரண்டாம் படைவீடு




தஞ்சை பூக்கார தெருவில் உள்ளது,சுப்பிரமணியசாமி கோவில். இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த ஆலயத்தில் முருகப்பெருமான் மனைவிகள் இன்றி தனித்து

காணப்படுகிறார். இங்கு கந்த சஷ்டி விழாவையொட்டி சூரசம்ஹாரம் வெகு விமரிசையாக நடைபெறும்.

திருச்செந்தூரில் வாழ்ந்த ஞானி ஒருவர், ஐம்பொன்னால் ஆன முருகன் சிலை வைத்திருந்தார். அவர் தினமும் கடலிலும், நாழிக் கிணற்றிலும் நீராடும்போது, முருகன் சிலையையும் நீராட்டி பூஜைகள் செய்வார். வயோதிகம் காரணமாக அந்த சிலையை வேறுயாரிடமாவது ஒப்படைத்து தினசரி பூஜைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஞானி எண்ணினார்.

ஒரு நாள் ஞானியின் கனவில் தோன்றிய முருகப்பெருமான், அவரை ஒரு ரெயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்த ரெயில்வே ஊழியரிடம் ஐம்பொன் சிலையை கொடுக்கும்படி கூறிவிட்டு மறைந்தார். கனவும் கலைந்தது. கனவில் வந்ததுபோலவே, குறிப்பிட்ட ரெயில்நிலையம் சென்ற ஞானி, ரெயில்வே ஊழியரை சந்தித்து சிலையைக் கொடுத்தார். அந்த ஊழியருக்கும், அந்தக் கனவு முன்தினம் வந்ததை அவர் கூறினார். இருவரும் முருகனின் அருளை எண்ணி நெகிழ்ந்தனர். பின்னர் தஞ்சை வந்த ரெயில்வே ஊழியர், இங்கு ஒரு குடில் அமைத்து முருகனை வழிபட்டார்.

திருச்செந்தூர் செல்ல முடியாதவர்கள் இங்கு பிரார்த்தனை செய்தால் எல்லா காரியங்களும் நிறைவேறும் என்பது நம்பிக்கை.

### மூன்றாம் படைவீடு

தஞ்சை சின்ன அரிசிக்கார தெருவில் உள்ளது, பாலதண்டாயுதபாணி கோவில். இந்த ஆலயத்தில் இந்திரன் வழிபாடு செய்ததாக சொல்லப்படுகிறது.




வழக்கமாக முருகப்பெருமானின் அருகில்மயில் வாகனம் காணப்படும். ஆனால் இந்த ஆலயத்தில் முருகப்பெருமான் சன்னிதியில் யானை இருப்பது அரிய காட்சியாக இருக்கிறது. இங்குள்ள உற்சவர் சிலை ஐம்பொன்னால் ஆனது. இங்கே விநாயகர், முருகன், இடும்பன், நவக்கிரக சன்னிதிகள், சிவன், தட்சிணாமூர்த்தி, ஆஞ்சநேயர், துர்க்கை அம்மன், பைரவர், நாகநாதர் உள்ளிட்ட சன்னிதிகள் உள்ளன. பொதுவாக நவக்கிரக சன்னிதிகள் வடகிழக்கு ஈசானிய மூலையில் அமைந்திருக்கும். ஆனால் இங்கு தென்மேற்கு மூலையில் அமைந்துள்ளது. அதுவும் ராகுவும், கேதுவும் இடம் மாறி இடம் பெற்றுள்ளன. இந்தக் கோவிலில் கார்த்திகை விரதம், பங்குனி உத்திர விழா, முத்து பல்லக்கு, சஷ்டி போன்ற விழாக்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

### நான்காம் படைவீடு

தஞ்சை ஆட்டுமந்தை தெருவில் சுவாமிநாத சுவாமி கோவில் உள்ளது. சுவாமி மலையில் முருகன் சன்னிதி இருப்பது போலவே, இங்கும் சன்னிதி அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோவி


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

லில் அரசு, வேம்பு மரம் சேர்ந்து ஈசான மூலையில் உள்ளது. இங்கு தஞ்சை பெரிய கோவிலில் இருப்பதை போல பிரகதீஸ்வரர், பெரியநாயகி அம்மன், நவக்கிரக தலங்கள், தட்சிணாமூர்த்தி, பைரவர், சண்டிகேஸ்வரர், பிரம்மா, ஆஞ்சநேயர் கணபதி, விஷ்ணு துர்க்கை, இடும்பன் என முருகனைத் தவிர 12 சன்னிதிகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கோவிலில் உள்ள ஒவ்வொரு சன்னிதிகளும் அதற்குண்டான வாஸ்து முறையில் இடம் பெற்றிருப்பது தனிச்சிறப்பு ஆகும். இந்தக் கோவிலுக்கு வந்து வழிபட்டால் அவர்களுடைய கஷ்டம் தீரும் என்பது ஐதீகம். இங்கு சூரசம்ஹாரம், முருகன் திருக்கல்யாணம், முத்துப்பல்லக்கு, பங்குனி உத்திரம், கார்த்திகை விரதம், கந்த சஷ்டி போன்ற விழாக்கள் விமரிசையாக நடந்து வருகிறது.

## ஐந்தாம் படைவீடு




தஞ்சை கீழவாசல் குறிச்சி தெருவில் உள்ளது, பாலதண்டாயுதபாணி கோவில். இங்கு வள்ளி தெய்வானையுடன் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார். கருவறைக்கு முன்பாக விநாயகரும், எதிரில் மயிலும், பலிபீடமும் காணப்படுகிறது. இந்த கோவில் கட்டப்பட்டு 150 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இங்கு முதலில் வேல் மட்டும் வைத்து வழிபட்டு வந்துள்ளனர். பிற்காலத்தில்தான் வள்ளி – தெய்வானையுடன் கூடிய சிலை பிரதிஷ்டை செய்துள்ளனர். முருகப்பெருமானின் கலியுக அவதாரமான திருஞானசம்பந்தருக்கும் இங்கு தனி சன்னிதி உள்ளது. தவிர விநாயகர், விசாலாட்சி, பைரவர், பஞ்சமுக ஆஞ்சநேயர், துர்க்கை, நவக்கிரக தலங்கள் உள்ளிட்ட சன்னிதிகள் உள்ளன. இங்கு முருகனுக்கு நடைபெறும் கந்தசஷ்டி உள்பட அனைத்து விழாக்களும் விமரிசையாக நடைபெறும். இந்தக் கோவிலில் தரிசனம் செய்தால் நிலம், வீடு உள்ளிட்ட சொத்து பிரச்சினைகள் தீரும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும். திருத்தணியில் முருகன் இருப்பதை போல இங்கும் காணப் படுவதால் இத்தலம் திருத்தணி என்று அழைக்கப்படுகிறது. தஞ்சை மாநகரில் ஈசானிய மூலையில் இத்தலம் அமைந்துள்ளது.

## ஆறாம் படைவீடு




தஞ்சை வடக்கு அலங்கம் பகுதி யில் உள்ளது, பால தண்டாயுதபாணி சுவாமி கோவில். இந்தக் கோவில் மன்னர் சரபோஜி காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியை ஆட்சி செய்த மன்னர்கள் அடிக்கடி பழனி முருகன் கோவிலுக்குச் சென்று வருவதுண்டு. அப்படி சென்று வர பல நாட்கள் ஆகிவிடும். இதனால் அங்கிருப்பது போலவே இங்கும் ஒரு ஆலயம் அமைக்க முடிவு செய்தனர்.

முருகப்பெருமான் கனவில் வந்து சொன்னதை அடுத்து, பழனி மலை அடிவாரத்தில் இருந்து ஒரு முருகன் சிலையை இங்கு கொண்டு வந்து நிறுவியிருக்கிறார்கள்.

பழனி முருகன் கோவில் இருப்பதைப் போல இது அமைந்திருந்தாலும், இதனை ஆறாம் படைவீடான பழமுதிர்ச்சோலை என்றுதான் பக்தர்கள் வழிபடுகின்றனர்.

கோவில் இருக்கும் பகுதி, மன்னர்கள் காலத்தில் முதலைகளுக்கு தீவனம் வைக்கும் கொட்டகையாக இருந்துள்ளது. எதிரிகள் தஞ்சை நகருக்குள் நுழையாமல் இருக்க அகழிகளை உருவாக்கியிருந்தனர். அதற்குள் பல முதலைகளை வளர்த்து வந்தனர். அந்த முதலைகளுக்காக ஒரு மண்டபத்தில் தீவனம் வைத்துள்ளனர். அந்த மண்டபத்தில்தான் இந்தக் கோவில் அமைந்திருக்கிறது.

முருகனின் ஆறுபடை வீடுகளை தரிசிப்பவர்கள் ஒருமுறை தஞ்சையில் உள்ள ஆறுபடை வீடுகளையும் வாய்ப்பு கிடைத்தால் தரிசிப்பது சிறப்பு.

– தொகுப்பு: ஷ்யாம் சுந்தர்
சென்னை.









# பாலாற்றின் அருகிலேயே அற்புதமான சிவாலயம்

திருக்கழுக்குன்றத்திலிருந்து மதுராந்தகம் செல்லும் சாலையில் சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது காலகண்டீஸ்வரர் ஆலயம். பாலாற்றின் கரையில் 500 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஆலயம். பழமையானது. கோயில் வாசல் தெற்கு பக்கம் அமைந்துள்ளது. கருவறை கிழக்கு பக்கம் பார்த்தவாறு உள்ளது. ஆலயத்திற்கு வெளியே கிழக்குபக்கம் பெரிய குளம் உள்ளது. ஆலயத்திற்கு உள்ளே நந்தி மற்றும் பலிபீடம் அமைந்துள்ளது. கருவறை சதுர அமைப்பினை கொண்டது. கருவறைக்கு முன் நீண்ட மண்டபம் உள்ளது.

பெரிய ஆவுடையாராக கால கண்டீஸ்வரர் நமக்கு காட்சி யளிக்கின்றார். கருவறைமுன் வினாயகர் சிலையும் – வள்ளிதெய்வானையுடன் முருகர் சிலைகளும் உள்ளது.

தெற்கு புற வாசலை பார்த்தவாறு திரிபுரசுந்தரி அம்மன் நமக்கு காட்டியளிக்கின்றார். அம்மன்வணங்கியபின் அம்மனுக்கு அருகில் பைரவர் காட்சியளிக்கின்றார்.

கருவறைக்கு வெளியே இறைவனை பார்த்தவாறு சூரிய தேவரும் – திருநாவுக்கரசர் சிலைகளும் அருகருகே அமைந்துள்ளனர்.

கருவறையை சுற்றி உள்ள கோஷ்டத்தில் முறையே வினாயகர், தட்சினாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்கை சிலைகள் அமைந்துள்ளன. சண்டிகேஸ்ரர் தனி சன்னதி உள்ளது.வெளிபுற சுவரில் தம்பதி சமேத நாயக்கர் கால சிலை புடைப்பு சிற்பமாக அமைந்துள்ளது. சமீபத்தில் கட்டப்பட்ட பெரிய அணை இந்த ஊரில் உள்ளது. பாலற்றில குளித்துவிட்டு அப்படியே இறைவனையும் தரிசித்துவரலாம்.



வேலன்

பழைய ஆலயம் என்பதால் அறநிலையத்துறை மூலம் விரைவில் புனரமைக்கப்பட உள்ளது.அர்ச்சகர் இல்லம் ஆலயத்திற்கு எதிரிலேயே அமைந்துள்ளது ஆலய தொடர்புக்கு: 9751895393

– வேலன்,
போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்





















## இலங்கையில் புத்தரிசி படையல், மலேசியாவில் 8மணி நேர பாதயாத்திரை

# உலகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும் தைபூசம்

அசுரனை அழிக்க அன்னையிடம் வீரவேலை வாங்கி, கையில் ஏந்திய நாளே தைப்பூசம் ஆகும்.

முருகப்பெருமானின் திருவிழாக்களில் முக்கியமானது தைப்பூசம் ஆகும். 27 நட்சத்திர மண்டலங்களில் எட்டாவது நட்சத்திரம் பூசம் ஆகும். தை மாதத்திலே பூச நட்சத்திரம் வரும் புண்ணிய நாள் தைப்பூச விழாவாக உலக மெங்கும் கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசம் வரும் நாள் பெரும்பாலும் நிறைமதி நாளாக இருக்கும். தைப்பூசம் முருகப்பெருமானுடைய விஷேசமாக கொண்டாடப்பட்டு வருகின்றன. அன்றைய தினம் குழந்தைகளுக்கு காது குத்துதல், படிப்பைதொடங்குதல் போன்றவற்றை சிறப்பாக செய்வார்கள்.

முருகனை வேண்டிக்கொண்டு காவடி எடுத்தல், போன்ற நேர்த்திக்கடன்களைநிறைவேற்றுவார்கள். இந்த நாளில் ஆறுபடை வீடுகள் உள்ளிட்ட அனைத்து முருகன் கோவில்களிலும், திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது மலேசியா, சிங்கப்பூர் என உலகின் பல்வேறு நாடுகளில் உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

### ஏன் இத்தினம் சிறப்பு

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில் தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. எனவே பல்வேறு இன்னல்கள் கொடுத்து வந்த அசுரர்களை அழிக்க வேண்டி சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்டனர்.

தங்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை.எனவே தங்களுக்கு தலைமை தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல்வாய்ந்த, சக்தி மிக்க ஒரு தலைவனை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் சிவ பெருமானிடம் வேண்டினர்.

தேவர்களின் நிலைகண்டு சிவபெருமான், அவர்களின் முறையீட்டை ஏற்று தனது தனிப்பட்ட சக்தியால் உருவாக்கிய அவதாரமே கந்தன்.

சிவனின்நெற்றிக்கண்ணில் இருந்துவெளியான 6 தீப்பொறிகள் 6 அழகான குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்களால், அக்குழந்தைகள் வளர்க்கப்பட்டு பின்னர் ஆறுமுகங்களுடன் அவதரித்தது.




அப்படி அவதரித்தவரே கந்தன் எனப்படும் முருகனாவார். சிவபெருமானின் தேவியான அன்னனை பார்வதி தேவியானவள் ஆண்டி கோலத்தில்பழனி மலையில் வீற்றிருக்கும் முருகப்பெருமானுக்கு ஞானவேல் வழங்கியது தைப்பூச நாளில்தான்.

அதன்காரணமாகவே பழனி மலையில் தைப்பூசத் திருவிழா மற்ற முருகன் கோவில்களைக் காட்டிலும் வெகுச்சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அப்படி அளிக்கப்பட்ட வேலினை ஆயுதமாகக் கொண்டே முருகன் அசுர குலத்தை அழித்து தேவர்களைக் காப்பாற்றினான்.

தேவர்களுக்குத் தொல்லை கொடுத்த அரக்கர்களை திருச்செந்தூர் எனப்படும் திருச்சீரலைவாயில் வதம் செய்து தேவர்கள் நிம்மதி அடையச் செய்தவர் முருக கடவுள். எனவே தான் அசுரர்களை வதம் செய்ய

முருகப்பெருமான் பயன்படுத்திய வேலினை வழிபட்டால், தீய சக்திகள் நம்மைத் தாக்காமல் இருப்பதுடன், அந்த சக்திகள் நமக்கு அடி பணிந்து நல்லருளை நல்கும் என்பது ஐதீகம்.

தைப்பூசத்தை முன்னிட்டு முருக பக்தர்கள், மார்கழி மாத ஆரம்பத்தில் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங்குகின்றனர்.

சஷ்டி கவசம், சண்முக கவசம், திருப்புகழ் போன்ற பாடல்களை அன்றாடம் பாராயணம் செய்து தைப்பூசத்தன்று பழனி முருகன் கோவி லில் சிறப்பு வழிபாடு செய்து விரதத்தை முடிப் பார்கள்.

ஆறுமுகப் பெருமானின் அருளை அடைவதற்கு தைப்பூசம் உகந்த நாள். முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளிலும் முருகனடியார்கள் பலர் பாதயாத்திரையாகச் சென்று தைப்பூசத்தன்று முருகனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

தைப்பூசத்தன்று முருகனுக்கு காவடி நேர்த்திக்கடன் செலுத்து வதையும் பக்தர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இந்த தைபூசம் இந்தியா மட்டுமல்ல உலகெங் கும் பல நாடுகளில் வெகு விமரிசையாக கொண் டாடப்பட்டு வருகின்றன.

உலககெங்கும் தைபூசம் கொண்டாடினாலும் ஒருசில ஊர்களில் வித்தியாசமாகவும் தை பூசத்தை கொண்டாடுகின்றனர்.

**இலங்கையில் புத்தரிசி கொண்டாட்டம்**

தைப்பூசத்தில் தான் யாழ்ப்பாண மக்கள் புதிர் எடுப்பர். தைப்பூசம் முருக னுக்கு உரிய சிறப்பான தினமாகக் கொண் டாடப்படுகின்றது. அன்று அதிகாலையில் எழுந்து வீடு வாசலைச் சுத்தம் செய்து வீட்டில் இருக்கும் ஆண்கள் நெல்லறுக்கும் அரிவாள், தேங்காய், கற்பூரம், கத்தி, கடகம் என்பவற்றுடன் வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரியனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டிற்கு எடுத்து வருவர்.

அதனைக் குடும்பத்தலைவி பெற்று சுவாமி அறையில் வைப்பார். அதில் இருந்து சில நெல்மணிகளை எடுத்து உமியை நீக்கி அந்த அரிசியைப் பசும் பாலுடன் கலந்து வாழைப் பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி அதில் இட்டு குடும்பத்தினருக்குப் பரிமாறுவர். அந்த அரிசியுடன் வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு சமைக்கப்படும்.

ஊரில் உள்ள முருகன் கோயில்களில் பால் குடம் எடுத்தும் காவடி எடுத்தும் தத்தம் நேர்த்தி களை நிறைவேற்றுவர்.

**மலேசியாவில்: 8 மணிநேர பாதயாத்திரை**

மலேசியாவில் முருகனுக்கு எட்டுமணி நேரத்திற்கு மேல் பாதயாத்திரையாக செல்வது வழக்கமாக கடைபிடிக்கின்றனர்.

சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் மலேசியா பத்துமலையில் குவிகிறார்கள். தைப்பூச நன்னாளில் பக்தர்கள் கோலாலம்பூர் மாரியம்மன் கோவிலிருந்து பத்து மலைக்கு அதிகாலையில் தொடங்கி ஊர்வலமாக நடந்து வருகிறார்கள். இதற்கு எட்டு மணி நேரமாகும். நேர்த்திக்கடன் செலுத்த சிலர் காவடி எடுத்து வருகிறார்கள். அலகு குத்தியும் இவ்வளவு தூரத்தை கடந்து நேர்த்திக்கடன் செலுத்துவோர் உண்டு. சுங்கை பத்து ஆற்றில் நீராடிவிட்டு, மலைக்கோவிலுக்கு 272 படிகள் ஏறி வருகிறார்கள்.

**பினாங்கு 3 நாள் தைப்பூசம்**

மலேசியாவின் பினாங்கு மாநிலத்தில் உள்ள தண்ணீர் மலை கோவிலில் பினாங்கு தைப்பூசம் மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. தண்ணீர் மலை கோவில் இந்தியாவுக்கு வெளியே அமைந்துள்ள முருகன் ஆலயங்களில் மிகவும் பெரியதாகும். தமிழர்கள் மட்டுமின்றி சீனர்களும் தைப்பூசத்தை மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். இத்தைப்பூசத் திருநாள் மூன்றுநாள் நடைபெறும். தைப்பூசத் திருநாளை பினாங்கு மாநில அரசு பொது விடுமுறையாக அறிவித்துள்ளது.

**உலகஅளவில் விடுமுறை:**

முருகனுக்கு உரிய தைப்பூசத்தன்று தமிழகம் மட்டுமின்றி, கேரளாவின் ஒருசில மாவட்டங்கள், புதுச்சேரி, மலேசியா, சிங்கப்பூர், பினாங்கு போன்ற வெளிநாடுகளில் விடுமுறை அளிக்கப்படுகிறது. அதேபோன்று மொரிஷியஸ், தென் னாப்பிரிக்கா, பிஜி ஆஸ்திரேலியாபோன்ற நாடுகளில் ஒருசில மாவட்டங்களில் உள்ளூர் விடுமுறைகொடுக்கப்படுகிறது.



# அஷ்டலட்சுமி அம்சமான லிங்கம் வெண்ணை காப்பிட்டால் கேட்ட வரம் தரும் சிவன்






அருள்மிகு சௌந்திரநாயகி அம்மன் உடனுறை கற்பக நாதர் திருக்கோயில் – கடிக்குளம் தேவாரப்பாடல் பெற்ற 276 சிவாலயங்களில் இது 173 வது தேவாரத்தலம் ஆகும்.

திருக்கடிக்குளம் (தற்போது கற்பகநாதர் குளம் என்றும் கற்பகனார் கோவில் என்றும் வழங்கப்படுகிறது)

அமைவிடம்: திருவாரூர் திருத்துறைப்பூண்டியில் இருந்து தொண்டியக்காடு செல்லும் சாலையில் சென்றால் சுமார் 15 கி.மி. தொலைவில் இத்தலம்இருக்கிறது. திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை, வேதாரண்யம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதி இத்தலத்திற்கு உள்ளது.

இத்தல இறைவன் சுயம்பு லிங்கமாக எட்டுப் பட்டைகளுடன் எழிலாகக் காட்சி தருகிறார்.

பித்ருக்களுக்கு பரிகாரம் செய்ய ஏற்ற தலம். விநாயகர் இறைவனைப் பூசித்து, மாம்பழம் பெற்ற பதி.

கார்த்திகாச்சுனன் என்ற அரக்கன் கற்பக லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டான்.

இறைவர் திருப்பெயர்: கற்பகநாதர்

இறைவியார் திருப்பெயர்: சௌந்திரநாயகி











**தல மரம்:** பலா

**தீர்த்தம்:** விநாயக தீர்த்தம் (கழக்குளம்)

**வழிபட்டோர்:** விநாயகர், கார்த்திகாச்சுனன் என்ற அரக்கன்

**தேவாரப் பாடல்கள்:** சம்பந்தர் பொடிகொண் மேனிவெண்.

**திருஞானசம்பந்தர் தேவாரம்**

பொடிகொள் மேனிவெண் ணூலினர் தோலினர்
புலியுரி யதளாடை
கொடிகொள் ஏற்றினர் மணிகிணின் எனவரு
குரைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத்
துறையுங்கற் பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரை
முன்வினை மூடாவே.

**தல வரலாறு**

கார்த்திகாச்சுரன் என்ற அரக்கன் இத்தல இறைவனை வழிபாடு செய்து வரங்கள் பல பெற்றான். தான் வேண்டும் போதெல்லாம் கற்பக விருட்சம் போல வரங்களை அள்ளித்தந்த இறைவனுக்கு கோயில் கட்டி வழிபாடு செய்தான். இதனால் இத்தல இறைவன் கற்பக நாதர் என வழங்கப்படுகிறார். கற்பக விநாயகர் கற்பகநாதரை வழிபட்டு மாங்கனி பெற்றுள்ளார்.

இத்தல சிவபெருமான் 8 முக பட்டை லிங்க மாக அருள்பாலிக்கிறார். இவரை தரிசிப்பதால் அஷ்டலட்சுமியின் அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

இவரை அஷ்டமி திதியிலும், சனிக்கிழமை புத ஹோரையிலும் குங்குமப்பூவுடன் வெண்ணெய் சேர்த்து காப்பிட்டு வணங்கினால் வேண்டும் வரம் கிடைக்கும் என்பது ஐதீகம். இத்தலத்தில் வெண்ணெய் தானம் செய்வது சிறந்தது. ராமர் சேது சமுத்திரத்தில் பாலம் கட்டும் முன்பாக இத்தலம் வந்து கற்பக விநாயகரையும், கற்பக நாதரையும் வழிபாடு செய்ததாக புராணம் கூறுகிறது.

இதன் காரணமாக கோதண்டராமர் கோயில்





www.aanmeegamalar.com


# நம்ம ஊரு கோவில்

உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

இ-மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com




இத்தலத்தின் அருகே உள்ளது. ஒரு அந்தணர் தன் தந்தைக்கு பிதுர்கடன் செய்வதற்காக கொண்டு வந்த அஸ்தி இத்தலத்திற்கு வந்த வுடன் கொன்றை மலராக மாறியது என்பர்.

## கோவில் அமைப்பு:

கோபுரத்திற்கு வெளியே நந்தி மண்டபம் உள்ளது. கோவிலுக்கு வடபுறம் விநாயக தீர்த்தம் உள்ளது. கோபுர வாயில் மாடங்களில் விநாயகர், சுப்பிரமணியர் காட்சி தருகின்றனர். உள்பிராகாரத்தில் நால்வர், தலவிநாயகர், முருகப்பெருமான், கஜலட்சுமி, தலமரம் பலா, சனீஸ்வரன், பைரவர், சூரியன், சந்திரன் சந்நிதி கள் உள்ளன.

இத்தல இறைவன் சுயம்பு லிங்கமாக எட்டுப் பட்டைகளுடன் எழிலாகக் காட்சி தருகிறார். இவரை தரிசிப்பதால் அஷ்டலட்சுமியின் அருள்கிடைக் கும் என்பது நம்பிக்கை.

இவரை அஷ்டமி திதியிலும், சனிக்கிழமை புத ஹோரையிலும் குங்குமப்பூவுடன் வெண்ணெய் சேர்த்து காப்பிட்டு வணங்கினால் வேண்டும் வரம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

அம்பாள் சந்நிதி தெற்குநோக்கி உள்ளது. நாடொறும் நான்கு கால வழிபாடுகள். ஆனித்திரு மஞ்சனம், நவராத்திரி, கார்த்திகை தீபம், திருவாதிரை, தைப்பூசம், அன்னாபிஷேகம், மகாசிவராத்திரி முதலிய சிறப்பு வழிபாடுகள் நடைபெறு கின்றன.



சிவத்திரு.குமரேசன்

ராமர் சேது சமுத்திரத்தில் பாலம் கட்டும் முன்பாக இத்தலம் வந்து கற்பக விநாயகரையும், கற்பகநாதரையும் வழிபாடு செய்ததாக தல புராணம் கூறுகிறது.

கோதண்டராமர் கோயில் இத்தலத்தின் அருகே உள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தலத் தின் கற்பக விநாயகர் கற்பகநாதரை வழிபட்டு மாங்கனி பெற்றுள்ளார். இவரின் சந்நிதி கோவிலுக்கு வெளியே அமைந்துள்ளது. அருகில் கோதண்டராமர் கோவிலும் உள்ளது.

– சிவத்திரு.குமரேசன்இராஜசிம்மன்
உதவிப் பேராசிரியர் SRM
கலை, அறிவியல் கல்லூரி PH:
919003296221
- easanaithedi.in


மீல் மேக்கர் கிரேவி
MEAL MAKER GRAVY
கீதா சமையல்
சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம்.
கீதா சமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்
ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்
பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்
LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி

உலகில் நாம் ஒரு பணி செய்யும்போது பொறுமையாகவும் மனதை ஒருமுகப்படுத்தி ஈடுபாட்டுடன் செய்யும்போதும் அந்தப் பணியில் எளிதில் வெற்றி பெறுவதற்கு முடியும். கல்வி கற்பதில், ஓவியம் வரைதல், மற்ற எந்தவிதமான செயல்பாடுகள் என்றாலும் அதில் மனம் ஒருமுகப்படுத்தி முழு ஈடுபாட்டுடன் செய்யும்போது வெற்றிகரமாக முன்னேற்றம் அடையலாம். இதற்கு மகாபாரதத்தில் வரும் ஒரு காட்சியை நினைத்து பார்த்தால் நன்கு விளங்கும்.

மகாபாரதக்கதையில் காணப்படும் ஒரு நிகழ்வை நினைத்துப் பார்த்தால் மனதை ஒருமுகப்படுத்துதல் என்றால் என்ன என்பது பற்றி நன்கு புரியும். தன்னோட மாணாக்கர்களுக்கு துரோணர் வில்வித்தை கற்றுக் கொடுக்கும்போது மரத்தில் அமர்ந்திருக்கும் ஒரு பறவையை சுட்டிக்காட்டி மரக்கிளையின் மீது என்ன தெரிகிறது என்று ஒவ்வொரு மாணாக்கரிடமும் கேட்டார். அதற்கு ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு விதமாக மரம் தெரிகிறது என்று கூறினார்கள். மரத்தின் கிளைகள் பூ காய் கனி கிளையில் அமர்ந்து இருக்கும் பறவை தெரிகிறது என்று கூறினார்கள்.

அவர் இதே கேள்வியை அர்ச்சுனனிடம் கேட்கும்போது "குருவே இப்போது நான் கையில் வைத்திருக்கும் வில்லில் நாண் ஏற்றி இருக்கும் இந்த அம்பின் கூர்மையான நுனியும், கிளையில் அமர்ந்து இருக்கும் பறவையினைத் தவிர வேறு ஒன்றும் எனது கண்களுக்குத் தெரியவில்லை என்று கூறினான். அதனால்தான் அர்ச்சுனன் வில்வித்தையில் சிறந்தவனாகத் திகழ முடிந்தது. நமது மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சியில் செயல்பாட்டில் அர்ச்சுனன் போன்று நிலைப்பாடு இருந்தால்தான். ஆன்மீகத்தில் மட்டுமல்லாமல் எதிலும் நாம் எளிதில் வெற்றி காணலாம். அதாவது மன அமைதிக்கு பொறுமையுடனும் தீவிரமாகவும் மனதை ஒருமுகப்படுத்தும் ஆன்மீகப் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

ஒருமுகப்படுத்தும் பயிற்சியின் மூலம் நம் மனதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும், அந்த மனதை ஓரிடத்தில் ஒரு பொருளின் மீது நிலையாக வைப்பதற்கு ஆன்மீக வழியில் பழக வேண்டும். சிலபேர் மனதை கஷ்டப்பட்டு தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள். ஆனால் அந்த மனதினை ஒரு பொருளின்மீது நிலையாக வைக்காமல், அதன் போக்கில் விட்டு விடுவார்கள். இதனால் ஆன்மீக வாழ்வில் நமக்கு ஒரு பயனும் ஏற்படுவதில்லை. மனதினை கட்டுப்படுத்தி ஒரு பொருளின் மீது நிலையாக வைத்திருப்பதற்குப் பெயர்தான் ஆன்மீகத்தில் சமாதானம் ஆகும்.

மனதினை ஒருமுகப்படுத்துவது எப்படி என்றால் அதற்கு உபாயம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால், மனதினை ஒருமுகப்படுத்தும் செயலில் நிலையாக வைத்துக்கொள்வதற்கு பலவிதமான ஆன்மீக வழியில் பயிற்சிகள் இருக்கின்றன. அதனை நாம் மேற்கொள்ள வேண்டும். கார், சைக்கிள் ஓட்டுவதற்கு வேண்டுமானால் அவற்றைப்பற்றி விளக்கமாக பள்ளியில் பாடமாக படித்தால் மட்டும் போதுமா? கார், சைக்கிள் போன்றவற்றை ஓட்டுவதற்கு பயிற்சி பெறவேண்டும். நீச்சல் பழக வேண்டுமானால் தண்ணீரில் விழுந்துதான் பழகவேண்டும்.

கார் ஓட்டுவதற்கு வேண்டுமென்றால் நாம் காரை மற்றவரின் துணை கொண்டு ஸ்டீரிங்கைப் பிடித்து ஓட்டி செய்முறை பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் நமது மனதை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு அதனை ஒரு பொருளின்மீது ஒருமுகப்படுத்துவதற்கு பொறுமையுடன் குரு கூறும் பயிற்சியினை கவனித்து அதனை தவறாமல் மேற்கொண்டு வர வேண்டும். ஆரம்ப பயிற்சியாக ஜபம் செய்து பழகும் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். ஜபம், தியானம் பற்றி நாம் ஆன்மீக நூல்களைப் படிப்பதாலோ, அவைகளைப் பற்றி ஆன்மீக அன்பர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதாலோ மட்டும் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு முடியாது.

மனம் ஒருமுகப்படுத்துவது பற்றி அதன் தொடர்பாகவுள்ள விளக்கப் படங்களைக் கண்டு களிப்பதாலோ புத்தகங்கள் படிப்பதாலோ நமது மனதினை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முடியாது. நமது மனதினை ஒரு பொருளின்மீது ஒருமுகப்படுத்த வேண்டுமானால் தகுந்த குருவை நாடி அவர் கூறியபடி நாம் மனப்பயிற்சியை மேற்கொண்டு வர வேண்டும். அப்போதுதான் தியானத்தின் பலனை நாம் முழுமையாக உணர்ந்துகொள்ள முடியும். நமது மன அமைதிக்கு மனதை ஒருமுகப்படுத்துதல் முக்கிய பயிற்சியாகும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மனதுக்கு ஒரு பணியினைக் கொடுத்து அந்தப் பணியில் இருந்து மனம் விலகாமல் இருக்க வேண்டும் என்றால் ஜபம் செய்வது என்பது ஒரு பயிற்சியாகும். மனிதனுடைய மனம் ஒரு நொடிகூட ஓய்வில்லாமல் ஏதாவது

34

ஒன்றினை நினைத்துக் கொண்டேதான் இருக்கும். உயிரை மேவிய உடலை வேண்டுமானால் நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம். தியானம் செய்யும்போது நமது மெய் அசையாமல் இருக்கலாம். ஆனால் நமது மனமானது நம் கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் அலைபாய்ந்து சஞ் சலப்பட்டுக்கொண்டே இருக்கும். சும்மா இருப்பது சுகம் என்று திருமூலர் கூறியுள்ளார். ஆனால் நாம் நினைப்பதுபோல் சும்மா இருப்பது என்பது அவ்வளவு எளிதானது அல்ல.

சும்மா இருப்பது என்றால் ஒரு செயலும் செய்யாமல் இருப்பது என்று ஆன்மீகத்தில் அர்த்தம் அல்ல. நமது மனம் எந்தவித சிந்தனையில்லாமல் வெறுமையாக இருக்க வேண்டும். நாம் ஒரு செயலும் செய்யாமல் கையைக் கட்டிக்கொண்டு இருந்து விடலாம் என்பது சும்மா இருப்பது என்பது அல்ல. மனதில் எந்தவிதமான சிந்தனையும் இல்லாமல் இருப்பதுதான் மிகவும் கடினம். இதனைத்தான் திருமூலர் ‘சும்மா இருந்து சுகம் காணுவது எக்காலம் மனமே’ என்று புலம்பித் தவிக்கிறார். நமது உடலும் உள்ளமும் ஒன்றும் செய்யாமல் தெளிந்த நீரோடை போன்று அசையாமல் இருக்க வேண்டும்.

சஞ்சலப்படும் மனதினை மனிதன் தன்னோட கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஜபம் தியானம் போன்ற ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். புலனடக்கம், இந்திரிய ஒழுக்கம் போன்றவை மனித மனதை ஒருமுகப்படுத்துவதற்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். மனித மனதை மனம் ஒரு குரங்கு என்று கவிஞர்கள், மனதினை கிளைக்கு கிளைக்குத் தாவும் குரங்குக்கு ஒப்பிட்டு பாடியுள்ளனர். மனம் எதைப் பற்றியும் நினைக்க வேண்டாம் என்று நினைத்தாலும் காரணமில்லாமல் எதையாவது நினைத்துக்கொண்டே இருக்கும். ஆரம்பத்தில் இந்த மனதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் மனதிற்கு ஜபம் ஒரு முக்கிய சாதனையாகும். அப்படி ஜபம் செய்யும்போது முழுமன ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்.

நம்மில் பலபேர் உதடுகள் ஜெபத்தில்முணு முணுத்துக் கொண்டிருக்கும் ஆனால் அவர்கள் மனம் அதன்போக்கில் எங்கெங்கோ எண்ணங்கள் போய்க்கொண்டிருக்கும். சாதுவிடம் ஒருவர் நான் ஒரு வருடமாக விடாமல் சகஸ்ரநாமம் சொல் லிக்கொண்டு இருக்கிறேன். மற்றொருவர் நான் தேவாரம் திருவாசகம் பக்தியுடன் படித்துக் கொண்டிருக்கிறேன். என்னோட மன தினை ஒருமுகப்படுத்த முடியவில்லையே என்று வருத்தப்பட்டுக் கூறினார். மனம் ஒருமுகப் படுத்த வேண்டுமானால் எண்ணமும் செயலும் ஒன்றுபோல் ஓரிடத்தில் குவிய வேண்டும். என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாம் மனதிடம் ஜபம் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தினை ஒதுக்கீடு செய்வதற்கு மனதிடம் மனதிற்குள் கட்டளையிட்டுக் கொள்ள வேண்டும். இது மனதிற்கு ஒரு மனப்பயிற்சி ஆகும். மனதில் வைராக்கியத்துடன் நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஜபம் செய்து பூஜை செய்யவேண்டும் என்று மனதிற்குள் நினைத்து, அதனை தவறாமல் நாள்தோறும் செயல்படுத்தினால் நம்மையறியாமலே குறிப்பிட்ட நேரத்தில் அந்தப் பணியினை செய்யும்படி நம் மனமே நம்மைத் தூண்டிவிடும். இந்த இடத்தில் நாம் மனதின் வழியில் செல்லாமல் அறிவின் வழியில் சென்றால் நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும்.

பொதுவாக நமது மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தால் நாம் நினைத்த பணியினை முழுமையாக செய்து முடிக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஒரு சித்திரம் வரைய வேண்டுமானால் ஓவியனின் மனம் ஓவியம் வரையும்போது அதில் ஈடுபாட்டுடன் வரைய வேண்டும். ஏதோவொரு காரணத்தினால் ஓவியனின் மனம் சஞ்சலத்தில் இருக்கும்போது ஓவியம் வரைவதில் அவன் கவனம் செலுத்துவதற்கு முடியாது. இதனைத்தான் பெரியவர்கள் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதை போல்தான் என்பதை தாங்கள் நினைத்தபடி ஒரு செயல்


www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

செய்ய முடியவில்லை என்றால் இப்படி கூறுவார்கள்.

எனவே மனதை ஒருமுகப்படுத்துவதர்க்கு ஜபம் என்ற சாதனையை தவறாமல் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். மனதிற்கு குறிப்பிட்ட நேரத்தில் ஜபம் செய்ய வேண்டும் என்று முழுமையாக அதற்கு கட்டளையிட்டு விட்டால் அந்த நேரத்தில் எத்தகைய சூழ்நிலையில் இருந்தால்கூட ஜபம் செய்வதற்கு நமது மனமே நம்மைத் தூண்டி விடும். நமது மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தால் நம்மிடம் இந்திரிய ஒழுக்கம் மனக்கட்டுப்பாடு இல்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஒழுக்கங்களை நாம் முழுமையாகக் கடைபிடித்தால் நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும் என்ற நம்பிக்கை வரவேண்டும். ஒருவர் எந்தப் பணியினை மேற்கொண்டாலும் அவர் மனம் முழு ஈடுபாட்டுடன் செய்தால்தான் வெற்றி பெறமுடியும். இதனை மனதில் நிலை நிறுத்தி வாழ்ந்தால் நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும்.

நம்பிக்கை எங்கு முழுமையாக இருக்கிறதோ அங்குதான் நமது மனம் குவியும் ஒருமுகப்படும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒருவன் கஷ்டப்படும்போது பெரியவர் ஒருவர் அவனுக்கு ஆறுதல் கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பெரியவர் கூறும் வார்த்தைகளை அவன் நம்பிக்கையுடன் காது கொடுத்து கவனமுடன் கேட்டால்தான் அவன் மனம் சமாதானம் அடையும். அதற்குமாறாக அந்தப் பெரியவர் ஒருமணிநேரம் அறிவுரைகள் கூறினாலும் கேட்பவர் நம்பிக்கையுடன் பெரியவர் கூறுவதைக் கவனமுடன் கேட்கவில்லையெனில் அவனது மனம் சஞ்சலத்தில் இருந்து மீள்வதற்கு முடியாது.

ஒருவர் கூறும் அறிவுரைகளை மனம் ஒரு முகப்படுத்தி கவனமுடன் நம்பிக்கையுடன் கேட்டால்தான் அந்த அறிவுரையைப்பற்றி நாம் புரிந்து செயல்புரிவதற்கு முடியும். அதன் மூலம் நமது மனம் அமைதி அடையும். இந்த இடத்தில் நம்பிக்கை அவசியம் வேண்டும் என்பதை நாம் புரிந்துகொண்டால், மனம் ஒருமுகப்படும். நமது வீட்டில்கூட பெரியவர்கள் சிலர் ‘நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன் அவன் கேட்க மாட்டேன் என்கிறானே’ என்று அலுத்துக் கொள்வார்கள். அதற்கு காரணம் பெரியவர்கள் கூறும் அறிவுரைகளை கேட்பவர்கள் மனம் கவனமுடன் கேட்கவில்லையென்றுதான் அர்த்தம் ஆகும்.



**எழுத்தாளர்**
**பூ.சுப்ரமணியன்**

சிலபேர் தாங்கள் செய்யும் செயல்களுக்கு தங்கள் மனதிற்குள் ளேயே அந்த செயலுக்கு ஒரு முடிவுக்கு வந்து விடுவார்கள். அவர்கள் எடுத்த முடிவைத் தவிர எந்த முடிவினையும் மற்றொருவர் அவருக்குத் தீர்வாகக் கூறினாலும் அவர் ஏற்றுக் கொள்வதில்லை. நன்மை தரக்கூடிய தீர்வாகக்கூட இருந்தாலும் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. எனவே பிறர் கூறும் கருத்துக்களை அறிவுரைகளை மனம் ஒருமுகப்படுத்தி அவர் என்ன நம்மிடம் கூற வருகிறார் என்பதை முதலில் கேட்டுப் பழக வேண்டும். அவ்வாறு இருந்தால் நமது மனம் ஓரளவு மனம் அமைதி அடையும்.

ஒருவர் கூறும் முடிவு அல்லது கருத்துக்கள் தனக்கு உடன்பாடாக இருந்தால் ஏற்றுக்கொள்வதற்கு தயங்கக்கூடாது. இதில் சிலபேர் கவுரவம் பார்த்துக்கொண்டு மற்றவர்கள் கூறும் கருத்துக்கள் உடன்பாடாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளுவதற்கு மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் எப்படி ஒரு தீர்வு அல்லது மன அமைதி காணமுடியும். எந்தப்பணி செய்தாலும் சிரத்தை இல்லையென்றால் மனதை ஒருமுகப்படுத்தி செய்யவில்லையெனில் அந்தப் பணியில் வெற்றி காண்பது அரிது. ஒருவருக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஜபம் தியானம் மற்றும் தங்கள் இஷ்ட தெய்வத்தின் சுலோகங்கள், போன்றவற்றை பற்றி படிக்கலாம்.

அடிக்கடி ஆன்மீக சொற்பொழிவுகளில் மற்றும் சத்சங்கங்களில் கலந்து கொள்ளலாம். அதனால் நமது மனம் வேண்டாத எண்ணங்களிலிருந்து அப்போது ஈடுபடுவதை தவிர்க்க முடியும். ஜபம் மந்திரம் கூறினாலும் மன ஈடுபாட்டுடன் கூற வேண்டும். சிலபேர் மந்திரங்களோ ஜபமோ சுலோகங்களோ அவர்களின் உதடுகள் சொல்லிக்கொண்டு இருக்கும். ஆனால் அவர் மனம் பலவித எண்ணங்களில் உலக விசயங்களை நினைத்துக் கொண்டு இருக்கும். இதற்கு நாம் பலவிதமான ஆன்மீக பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எதிலும், விடாமுயற்சி நம்பிக்கை முழு ஈடுபாடு இருந்தால் நாம் தேடும் ஆன்மீக வழியில் அமைதி கிடைக்கும். நமது மனதை ஒருமுகப்படுத்துவதனால் நமக்கு என்ன பயன் அல்லது பலன்கள் கிடைக்கும்?.


**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308



**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க

Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து




நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் எதுமில்லை

இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...